பக்கங்கள்: 20

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 08 ஞாயிற்றுக்கிழமை 25.09.2022 கதிர் 322

### இது ரகசியம் அல்ல!

முஸ்லிம்களின் முக்கிய நாடுகளில் ஒன்று சவுதி அரேபியா. இலங்கை உட்பட முஸ்லிம்கள் வதியும் நாடுகளில் அவர்களின் நலன்களை கவனிப்பதில் சவுதிக்கு முக்கிய இடம் உண்டு.

அத்தகைய சவூதி அரேபியாவின் தேசிய தின 2







# அரச எதிர்ப்புப் போராட்டம் நேற்றும் கலைக்கப்பட்டது

## கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு, நீர்தாரைப் பிரயோகம்; இரு பிக்குகள், நான்கு பெண்கள் உட்பட 84 பேர் கைது

கொழும்பு,செப்ரெம்பர் 25

உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்திற்கு எதிராக தலைநகர் கொழும்பில் மருதானையில் நேற்றுப் பிற்பகல் முன்னெடுக்கப்பட்ட பாரிய ஆர்ப்பாட்டப் பேரணியை பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசி, நீர்தாரையைப் பீய்ச்சி அடித்துக் கலைத்தனர். அதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. 19

## அதியுயர் பாதுகாப்பு வலயம் பற்றிய பிரகடனம் சட்டக்கு முரணானதாம்!

### ஆட்சேபிக்கிறது சட்டத்தரணிகள் சங்கம்

உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தின் பிரிவு 2க்கு அமைய, பெரிய பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்த அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அந்தப் பிரிவின் கீழ், இரகசியங்களைப் 19

## மது போதையில் மாவாவுடன் யாழில் சிக்கிய 4 மாணவர்கள்

### பொலிஸ் எச்சரித்து விடுவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவர்கள் நால்வர் மதுபானம் மற்றும் மாவா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 19

## கடலுக்கு இன்றிரவு மீனவர்கள் செல்லார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப். 25

நாளை நடைபெறும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுக்கு 2

## திலீபனின் நினைவு நிகழ்வுகளில் ஒன்று கூட மக்களுக்கு அழைப்பு




தியாகதீபம் திலீபனுடைய இறுதி நாள் நிகழ்வுகளில் அனைத்து தமிழ்த் தேசிய உறவுகளையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியப் பண்பாட்டு பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பின் போதே பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சு.நிஷாந்தன் 19

## ஹெரோயின் அதிகம் பாவித்த மற்றொரு இளைஞர் மரணம்!

### நேற்று பண்டத்தரிப்பில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் அதிகளவு ஹெரோயின் போதைப் பொருளை எடுத்துக் கொண்ட மற்றொருவர் உயிரிழந்துள்ளார். 2

## சின்னப்பண்டிவிரிச்சானில் யானை தாக்கி ஒருவர் சாவு

விறகு சேகரிப்பதற்காக வெள்ளிக்கிழமை பிற்பகல் வீட்டிலிருந்து காட்டுக்குள் சென்றவர் யானை தாக்கி உயிரிழந்த சம்பவம் மன்னார் மடுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மடு பிரதேச செயலகப் 2

## பால் புரையேறி சிசு உயிரிழப்பு

வடமாராட்சி கிழக்கு செம்பியன் பற்று மாமுனை பகுதியில் பால் புரையேறியதில் 10 2

## பாலியல் சீண்டல்: பத்துப் பேருக்கும் விளக்கமறியல்

சுற்றுலா வந்த வெளிநாட்டுப் பெண் மீது பாலியல் சீண்டல்களைப் புரிய முயற்சித்த 10 2

## ரூ.1 கோடி பெறுமதி 8 கஜ முத்துக்களுடன் ஒருவர் கைது



சுமார் 1 கோடி ரூபா பெறுமதி மிக்க எட்டுக் கஜமுத்துக்களுடன் ஹிரகஸ்மங்ஹந்திய 2

## போதைக்கு அடிமையான சிறுமி 8 மாதக் கர்ப்பமாம்

யாழ்ப்பாணத்தில் போதைக்கு அடிமையான சிறுமி 08 2




## குருந்தூர்மலை ஆர்ப்பாட்டத்தை ஒட்டி கைதானவர் 29 வரை விளக்கமறியலில்!

### அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்படுவாராம்

(விஜயரத்தினம் சரவணன்)

குருந்தூர்மலையில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்றமையைக் கண்டித்து தமிழ் மக்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை ஒட்டிக் கைது செய்யப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனை எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு பொலிஸாரால் விசாரணைக்கு என அழைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்ட அவர், நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு இரண்டொரு நாள்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்றது. நிகழ்வுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் எல்லோரும் வந்து இருந்தனர். ஆனால் சவுதி தூதுவர், பிரதமர் தினேஷ் குணவர்த்தனா போன்றோர் அமர்ந்திருந்த பிரதானமேசையில்ஹக்கீமோ, ரிஷாத்தோ அமரவில்லை. சவுதித் தரப்புக்கு மிக முக்கியமான இருவரும் நிகழ்வில் பெயருக்குத் தலைகாட்டி விட்டு, சுமார் பத்து நிமிட நேரத்தில் வெளியேறிவிட்டனர். எல்லாவற்றிற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

இலங்கையில் முஸ்லிம்களைக் கரித்துக் கொட்டி, ஏளனம் செய்து, முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவே அடாவடித்தனம் பண்ணிய பொதுபல சேனவின் பொதுச் செயலாளர் வண. ஞானசார தேரரும், அதே போக்கு மற்றொரு பிக்குவும் அங்கு பிரதான மேசையில் முக்கிய இடம் கொடுத்து கௌரவிக்கப்பட்டிருந்தனர். இலங்கையில் இஸ்லாமிய வழிபாட்டு முறைகள், சட்டங்கள் தொடர்பாக மிக மோசமான விமர்சனங்களை செய்து வந்த இவர்களுக்கு இத்தகைய முக்கியத்துவம் அளித்து கௌரவம் வழங்கிய சவுதியின் இந்த நடவடிக்கை ஹக்கீம், ரிஷாத் போன்றோரின் மனதை நிச்சயம் நெருடியிருக்கும் என்பதை உணர முடிந்தது.

எனினும் முஸ்லிம் காங்கிரஸின் 'பல்டி' அமைச்சர் நசீர் அஹமட் மட்டும் இந்த சூடு, சொறணை எல்லாம் இல்லாமல், பகைமை பாராட்டாமல், ஞானசார தேருடன் ஒரே மேசையில் மிகுந்த மனமகிழ்வுடன் அமர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் தொப்பியின் ஒரு பக்க நிறத்தை ஹக்கீம் அணிந்திருக்க, மற்றப் பக்க நிறத்தை அஹமட் அனிந்திருக்கிறார் என்று தோன்றியது. அந்தப் பக்கம் ஒரு நிறம்; இந்தப் பக்கம் ஒரு நிறம் இருக்கும் போல...!

***

ரணில் அரசு முன்னெடுத்த சர்வ கட்சி அரசு அமைக்கும் முயற்சி ஆரம்பத்திலேயே காற்றுப் போய், காணாமலும் போய்விட்டது.

மாற்றாக, 'தேசிய சபை' என்ற சர்வ கட்சிகளும் அங்கம் வகிக்கும் ஓர் ஏற்பாடு மூலம், ஆட்சி முறைமையை எல்லா கட்சிகளும் சேர்ந்து கண்காணிக்கும் ஓர் ஏற்பாட்டைச் செய்ய ஜனாதிபதி ரணில் எடுத்த முயற்சியும் ஆரம்பத்திலேயே நொண்டத் தொடங்கி விட்டது.

அதில்பங்குகொள்வதில்அர்த்தமில்லை என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கூண்டோடு ஒதுங்கும் நிலையே காணப்படுகின்றது.

அரசாங்கத்தோடு டீல் போட்டவர்களே இந்தத் தேசிய சபையில் இருக்கின்றார்கள் என்று சீறும் ஜே.வி.பியும் அதிலிருந்து ஜாகா வாங்கும் நிலைமையே உள்ளது.

பெரும்பாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் அதே வழியை நாடக்கூடும். அதன் பங்காளிகளான மனோ கணேசன், பழனி திகாம்பரம் போன்றோர் என்ன செய்யப் போகின்றனர் என்பது இன்னும் உறுதியாகவில்லை. ஆஸ்திரேலியா சென்றுள்ள மனோ கணேசன் இரண்டொரு தினங்களில் கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போதுதான் அவர்கள் தரப்பு முடிவு தெரிய வரும்.

ஆரம்பத்திலேயே தேசிய சபை நொண்டத் தொடங்கி விட்டதால் அரசுத் தரப்புகளை மட்டும் வைத்து வண்டி ஓட்டும் விவகாரமாகதான் இதுவும் முடியும் போல...!

**- மின்னல் -**

## கடலுக்கு இன்றிரவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவளிக்கும் வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்றிரவும் நாளை விடிகாலையும் கடற்தொழிலுக்கு செல்வதனை தவிர்க்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு கோரி இந்திய அரசிடம் கோரிக்கைகளை முன்வைத்து தியாக தீபம் திலீபன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து உயிர்க்கொடை வழங்கிய நாள் நாளை திங்கட்கிழமை 35ஆவது ஆண்டாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நினைவேந்தல் நிகழ்வுக்கு ஆதரவளிக்கும் வகையில் யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு கடற்தொழிலுக்கு செல்வதனைத் தவிர்க்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்மாவட்டகடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அ.அன்னராசா இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

## பால் புரையேறி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களேயான குழந்தை நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது. பால் கொடுக்கப்பட்ட போது புரையேறி மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

இதனால் குழந்தையை அம்பன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் குழந்தை இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மரண விசாரணையை பருத்தித்துறை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா மேற்கொள்ளவுள்ளார்.

## பாலியல் சீண்டல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்களையும் நாளை 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

ஸ்பெயின் நாட்டிலிருந்து காரைநகரிற்கு சுற்றுலா சென்ற பெண்ணும் அவரது நண்பரும் யாழ்.காரைநகர் கசூரினா கடற்கரைக்கு கடந்த வியாழக்கிழமை மாலை சென்றுள்ளனர். அப்பகுதியில் மதுபோதையில் இருந்த இளைஞர்கள் அந்த இருவரையும் தகாத வார்த்தையால் பேசியமையுடன் அந்தப் பெண்ணிற்கு பாலியல் தொல்லையும் கொடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த ஊர்காவற்றுறை பொலிஸார் 10 இளைஞர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டபோது சந்தேகநபர்களில் இருவரை பாதிக்கப்பட்ட பெண் அடையாளம் காட்டியுள்ளார்.

இந்நிலையில் 10 இளைஞர்களையும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

## ரூ.1 கோடி பெறுமதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 43 வயதுடையவர் எனவும், அவர் ஹீரகஸ்மங்ஹந்திய பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## போதைக்கு அடிமையான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத கர்ப்பமாகவுள்ள நிலையில் மறுவாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என இணயத் தளச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் 17 வயதான சிறுமி உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையான நிலையில் மீட்கப்பட்டார்.

இதனையடுத்து, அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையின் போது, சிறுமி 08 மாத கர்ப்பமாகவுள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறுமி நீதிமன்ற உத்தரவின் பேரில் மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை இந்தச் சிறுமி போதைப் பொருளினை பெற்றுக் கொள்வதற்காக பாலியல் துர்நடத்தைகளில் ஈடுபட்டமையினால் தான் கர்ப்பம் தரித்தார் என தெரிவிக்கப்படுகிறது.

## ஹெரோயின் அதிகம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய அவர் ஹெரோயின் போதைப் பொருளை அதிகளவில் பயன்படுத்தியமையால் உயிரிழந்தார்.

மருத்துவ பரிசோதனையிலும் அவரது உயிரிழப்புக்கு ஹெரோயின் போதைப் பொருளை அதிகளவு எடுத்துக் கொண்டமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னப்பண்டிவிரிச்சானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவிலுள்ள சின்னப்பண்டிவிரிச்சான் பகுதியில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான பபா என அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் ஸ்ரான்லி (வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு வீட்டில் இருந்து வெளியே சென்ற கணவர் மாலையாகியும் வீடு வராததால், மனைவி தேடிச் சென்றதாகவும், பின் அயலவர்களின் உதவியை நாடி காட்டுக்குள் சென்று தேடியபோது வீட்டிலிருந்து சுமார் ஐந்நூறு மீற்றர் தூரத்திலுள்ள காட்டுக்குள் யானையினால் தாக்கப்பட்ட நிலையில் அவர் இறந்து கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் சடலம் மன்னார் பொது வைத்திசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு மரண விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## குருந்தூர்மலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக ஆஜர் செய்யப்பட்டார்.

சின்னராசா லோகேஸ்வரன் தொடர்பாக ஓர் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட வேண்டுமென பொலிஸார் நீதிமன்றிலே விண்ணப்பம் செய்திருந்தனர்.

அந்தக் கோரிக்கையின் பேரில் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் அவரை வைத்து அடையாள அணிவகுப்பை நடத்துவதற்கான கட்டளையை நீதிமன்றம் வழங்கியது.










# ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இந்த வருடம் அதிகம்!

**லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் நிபுணர் கருத்து**



கொழும்பு, செப். 25

இந்த வருடத்தில் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதிகம் பதிவாகியுள்ளதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை யின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 60 சிறுவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா தொற்றும் இந்த நிலைக்கு காரணமாக இருக்கலாம் என்பதோடு இருமல் மற்றும் மூச்சுத்திணறல் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.












காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சட்டத்தை வளைக்கும் அறிவிப்பு

**தவறு செய்வோர், அதற்காக சட்டத்தை வளைப்பது – சட்டத்தில் உள்ள ஓட்டைகளை லாவகமாக பயன்படுத்துவது – குறித்தெல்லாம் அறிந்திருக்கின்றோம்.**

**ஆனால் சட்டத்தையே தவறாக அர்த்தப்படுத்தி – பயன்படுத்தி – சட்ட முறையற்ற வேலையை முன்னெடுக்கும் அரசாங்கத்தை இப்போதுதான் காண்கிறோம்.**

**அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சிப் போராட்டத்தை தன்னுடைய அரசியல் இலக்குகளுக்காக 'பயங்கரவாத நடவடிக்கையாக' சித்திரித்து, சட்ட அர்த்தம் கற்பித்து, அந்தக் கொடூரச் சட்டத்தை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக ஏவி விட்ட கீழ்த்தர அரசு இது!**

**ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் செய்வது என்பதும் கூட மக்களின் கருத்துச் சுதந்திரத்தை வெளியிடும் ஓர் அடிப்படை உரிமையின் பாற்பட்டதே. அந்த அடிப்படை உரிமையை மீறுவதற்காக, அதனை 'பயங்கரவாதமாக' சித்திரிக்கும் 'படு போக்கிரித்தனமான' பண்பியல்பைப் பார்த்து உலகமே விக்கித்து போய் நிற்கின்றது.**

**இப்படிச் சட்டத்தை – அதன் வியாக்கியானத்தை – தனது அரசியல் இலக்குகளுக்காக முறையற்ற விதத்தில் வளைக்கும் பண்பியல்பு இப்போது மற்றொரு விடயத்திலும் அரங்கேறி இருக்கின்றது.**

**மக்களின் அரசியல் கருத்து நிலைமையை ஒட்டிய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளினால் இலக்கு வைக்கப்படக் கூடியவை என்று தான் கருதும் இடங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தி பாதுகாக்க முற்படுகின்றது ரணிலின் அரசு.**

**அரச இரகசியப் பாதுகாப்பு தொடர்பான 1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் சில இடங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் ஒன்று கூடிப் பயன்படுத்தும் பல இடங்களை இப்படி பொருத்தமற்ற சட்டம் மூலம், இரகசியங்களைப் பாதுகாக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களாக ஜனாதிபதி அறிவித்தமை சட்ட முறையற்ற செயல் என்பதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டி உள்ளது. ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றச் சுற்றாடலில், பொதுமக்கள் கூடும் இடங்கள் கூட இப்படி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றமை பெரும் விந்தையாகும்.**

**ஒரு நிலத் துண்டை, ஒரு கட்டடத்தை, ஒரு கப்பலை அல்லது வான் கலத்தை, அரச இரகசியங்களைப் பாதுகாக்கும் நோக்கில் இப்படி பாதுகாப்பு வலயப் பிரதேசமாக அறிவிக்கும் ஏற்பாட்டுக்குரியது இச்சட்டம்.**

**அந்தச் சட்டப் பிரிவை மக்கள் பெரும் எண்ணிகையில் கூடும் இடத்துக்கு பொருத்த முயலும் ரணில் அரசின் நடவடிக்கை நிச்சயம் நீதிமன்றத்தினால் குட்டுப்பு போட்டுத் திருத்தப்படும் என்று நம்பலாம்.**

**இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிகிறது.**

**அப்படித் தாக்கலாகக் கூடிய அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பதை பரிசீலிக்கும் போதே, இந்த வர்த்தமானி உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.**

**இனி எல்லாம் நீதிமன்ற வியாக்கியானத்தில்தான் தங்கியுள்ளது.**

## சமகால சவால்களை முறியடிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைதல் வேண்டும்

### கூறுகின்றார் அலி சப்றி



சமகால சவால்களை முறியடிக்க அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி கோரிக்கை விடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் ஐ.நா.பொதுச் சபையின் 77 ஆவது கூட்டத் தொடரின் ஓர் அங்கமாக இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யியை சந்தித்தும் அமைச்சர் அலி சப்றி கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பும், நீண்டகால நட்புறவுக்கான தங்கள் உறுதிப்பாட்டையும் ஒத்துழைப்பையும் தொடர உறுதியளித்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் அஹ்மத் அல் சயீக், முதலீடுகள் மற்றும் விமான இணைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட இருதரப்பு ஒத்துழை குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

மேலும், நேபாளம் மற்றும் இலங்கை உறவுகளின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக நேபாளத்தின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அமைச்சர் அலி சப்றியுடன் கலந்துரையாடியுள்ளார்.

## கஞ்சா ஏற்றுமதியைச் சட்ட பூர்வமாக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தது இலங்கை!

கஞ்சா ஏற்றுமதியை சட்டப்பூர்வமாக்குவதற்கான சட்டங்களை உருவாக்க அமைச்சரவைப் பத்திரம் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும் என சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

கஞ்சா உற்பத்தி மூலம் நாடு பாரிய ஏற்றுமதி வருமானத்தை ஈட்ட முடியும் என்றும் எதிர்வரும் 5 ஆம் திகதிக்குள் இதற்கான ஆவணத்தை வகுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுமருத்துவம்மற்றும்ஆயுர்வேத நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையால் சுமார் 300 கோடி அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

ஆகவே கஞ்சா ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பாக அண்மைய நாள்களில் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பரவலாகக் கலந்துரையாடப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் 4 ஆயிரம் கோடி டொலர் அளவிற்கு கஞ்சாவிற்கான கேள்வி இருப்பதாகவும் இதனை இலங்கை பயன்படுத்த வேண்டும் என்றும் அதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பல நூற்றாண்டுகளாக இவ்வாறான மருந்துகள் பாவனையில் இருந்தன எனவும், காலனித்துவ காலத்தில் தான் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன எனவும் அவர் கூறியுள்ளார்.

## சிறுவர் இல்லங்களில் சிறுவர் எண்ணிக்கை பொருளாதார நெருக்கடிகளால் அதிகரிப்பு!

### வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களம் தகவல்

பொருளாதார நெருக்கடியால் பிள்ளைகளைப் பராமரிக்க முடியாது எனத் தெரிவித்து, சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பிள்ளைகளைச் சேர்க்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே அதிகளவான பிள்ளைகளை சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பெற்றோர் சேர்த்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் 2021 ஆம் ஆண்டு 158 பிள்ளைகள் சேர்க்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டின் அரையாண்டு கால பகுதிக்குள் 246 பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் 124 பேரும் , கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 45 பேரும், மன்னார் மாவட்டத்தில் 07 பேரும் வவுனியா மாவட்டத்தில் 08 பேருமாக 246 பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளனர் என அறியமுடிகின்றது.

மேலும் பெற்றோரின் பொருளாதார நிலைமைகளை அறிந்து உண்மையில் அவர்களால் பிள்ளைகளை பராமரிக்க முடியாதா என்பதை உறுதிப்படுத்திய பின்னர் வடமாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளை சேர்க்க அனுமதிப்போம் எனவும் வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் இ.குருபரன் குறிப்பிட்டுள்ளார்.

## கோதுமை மாவின் விலை குறைவடையும் சாத்தியம்?

எதிர்வரும் வாரம் முதல் கோதுமை மாவின் விலை குறைவடையும் சாத்தியம் உள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா தற்போதைய நிலையில் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

துருக்கி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமைமாவே இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளது.

நாட்டின் பிரதான கோதுமை மா விநியோக நிறுவனங்கள் இரண்டும், கடந்த காலங்களை இறக்குமதிகளை நிறுத்தியிருந்தன.

இதனால், கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், அதன் விலைகள் 300 முதல் 400 ரூபா வரையில் அதிகரித்தது.

இந்த நிலையில், மீண்டும் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த வார இறுதியில் பாரிய தொகை கோதுமை நாட்டுக்கு கொண்டுவரப்பட உள்ளதாக இறக்குமதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதனால், விலை குறைவடையும் வாய்ப்புகள் காணப்படுகின்றன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# உக்ரைனில் உடனடிப் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ஜெனிவாவில் இந்தியா கருத்து




உக்ரைனில் அனைத்துப் போர் நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டியதன் அவசியத்தை இந்தியா மீண்டும் வலுவாக வலியுறுத்தியுள்ளது. மேலும் இராஜதந்திரத்திற்குத் திரும்ப வேண்டும் என்று ஜெனீவாவில் உள்ள ஐ.நா.வுக்கான தூதர் இந்திராமணி பாண்டே கூறினார். அத்தோடு மோதலின் பாதை ஆழ்ந்த கவலைக்குரியது என்றும் அவர் கூறினார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உக்ரைன்மோதலின்பாதைஆழ்ந்தகவலைக்குரிய விடயம். அனைத்து விரோதங்களையும் உடனடியாக நிறுத்தி, பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திரத்திற்கு திரும்ப வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலுவாக வலியுறுத்துகிறது. - என்றார் அவர்.

பிரதமர் நரேந்திர மோடியின் செய்தியையும் தூதர் நினைவு கூர்ந்தார். அங்கு இது போரின் சகாப்தமாக இருக்க முடியாது என்று அவர் வலியுறுத்தினார்.

உக்ரைனில் உள்ள மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைமை குறித்த புதுப்பிப்புகளை இந்தியா கவனத்தில் எடுத்துக்கொண்டதாகவும், இந்த விவகாரத்தில் சுதந்திரமான மற்றும் புறநிலை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மோதல் சூழ்நிலைகளில் கூட மனித உரிமைகள் அல்லது சர்வதேச சட்டங்களை மீறுவதற்கு எந்த நியாயமும் இருக்க முடியாது என்று நாங்கள் நம்புகிறோம். இதுபோன்ற மீறல்கள் ஏதேனும் ஒரு புறநிலை மற்றும் சுதந்திரமான முறையில் விசாரிக்கப்பட வேண்டும். பொதுமக்கள் படுகொலைகளை நாங்கள் கடுமையாக கண்டித்து, சுதந்திரமான விசாரணைக்கான அழைப்புக்கு ஆதரவளித்துள்ளோம்." - என்றார் அவர்.

மேலும், மோதலின் தாக்கம் உலகம் முழுவதும் உணரப்பட்டு வருவதாகவும் தூதுவர் கூறினார். அதிகரிக்கும் செலவுகள் மற்றும் உணவு தானியங்கள், உரங்கள் மற்றும் எரிபொருளின் உண்மையான பற்றாக்குறை ஆகியவற்றின் அடிப்படையில் அதன் விளைவுகளை நாம் அனைவரும் அனுபவித்திருக்கிறோம். இந்த சவால்களைத் தணிக்க இந்தியா அதன் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளது. - என்றும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரேனுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்து பேசிய தூதுவர், உக்ரைனில் மனிதாபிமான உதவியின் தேவைக்கு சர்வதேச சமூகம் தொடர்ந்து சாதகமாக பதிலளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

உக்ரைனுக்கு இந்தியா தனது பன்னிரண்டாவது தொகுதி மனிதாபிமான உதவிகளை சமீபத்தில் ஒப்படைத்துள்ளது, என்று அவர் உக்ரைனுக்கான உதவியைச் சேகரிப்பதில் இந்தியாவின் முனைப்பை எடுத்துரைத்தார்.

"தற்கால உலகளாவிய ஒழுங்கானது, சர்வதேசச் சட்டம், ஐ.நா. சாசனம் மற்றும் அனைத்து நாடுகளின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கான மரியாதை ஆகியவற்றில் தொகுக்கப்பட்டுள்ளது என்பதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். இந்த கொள்கைகள் விதிவிலக்கு இல்லாமல் நிலைநிறுத்தப்பட வேண்டும். - என்றும் இந்தியப் பிரதிநிதி வலியுறுத்தினார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# மோடி மீது தாக்குதலை நடத்த பி.எவ்.ஐ. திட்டமிட்டிருந்ததாம்!

பீஹார் மாநிலம் பாட்னாவில் நடந்த பேரணியில் பிரதமர் மோடி மீது தாக்குதல் நடத்த 'பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா(பி.எவ்.ஐ.) அமைப்பு திட்டமிட்டிருந்ததாக அமலாக்கத்துறை குற்றம்சாட்டி உள்ளது.

தீவிரப் போக்கு இஸ்லாமிய அமைப்பான பி.எவ்.ஐயின் நாடு முழுவதிலும் உள்ள அலுவலகங்கள் மீது இந்திய அதிகாரிகள் அதிரடிப் பாய்ச்சல் நடத்தித் தேடுதல் மேற்கொண்டு, பல ஆதாரங்களைக் கைப்பற்றி, பலரைக் கைது செய்து வருவது தெரிந்ததே.

மேலும், உத்தரப்பிரதேசத்தில் பதற்றம் நிறைந்த பகுதிகள் மற்றும் தனி நபர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களைச் சேகரித்துள்ளது. இது விடயம்

கேரளாவில் கைது செய்யப்பட்ட பி.எவ்.ஐ. உறுப்பினர் பீக் பயீத்திடம் கைப்பற்றப்பட்ட குறிப்புகளில் கூறப்பட்டுள்ளன எனவும், கடந்த ஜூலை 12 இல் பிரதமர் மோடியின் பாட்னா வருகையின் போது தாக்குதல் நடத்துவதற்காக பயிற்சி முகாம்களை இந்த அமைப்பு நடத்தி உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, பி.எவ்.ஐ.அமைப்பு சேகரித்த 120 கோடி ரூபா நிதி குறித்த விவரங்கள் கிடைத்துள்ளன. பணம் பெரும்பாலும் ரொக்கமாக வசூலிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் கலவரத்தை ஏற்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என அமலாக்கத்துறை குற்றம்சாட்டியுள்ளது.

டில்லியில், பி.எவ்.ஐ. அலுவலக பொறுப்பாளர்களான பெர்வேஷ் அகமது, இலியாஸ், அப்துல் முகீத் ஆகியோரை அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். கடந்த 2018 அம் ஆண்டு முதலான விவகாரங்களை அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்துகின்றனர்.



# நாளை பூமிக்கு நெருக்கமாக வருகின்றது வியாழன் கோள்!



## 59 ஆண்டுகளின் பின்னரான நிகழ்வு

வானில் நிகழவிருக்கும் ஒரு அரிய நிகழ்வாக சூரிய குடும்பத்தில் மிகப்பெரிய கோளான வியாழன் நாளை திங்கள் கிழமை பூமிக்கு அருகே வருகிறது.

நமது சூரியக்குடும்பத்தில் ஐந்தாவது கோளாக இருப்பது வியாழன் கோள் ஆகும். இது தான் சூரியக் குடும்பத்திலேயே மிகப்பெரிய கோளாகும். நமது பூமியை போல 1,300 பூமியை வியாழனில் அடக்கி விடலாம் என்றால், அதன் அளவை நீங்களே யோசித்துப்பாருங்கள்.

இந்த வியாழன் கோளை 75 க்கும் மேற்பட்ட துணைக்கோள்கள் சுற்றிவருகின்றன எனவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த பிரம்மாண்ட கோள்தான் நாளை பூமிக்கு அருகில் வரவிருக்கிறது என்று நாசா தெரிவித்துள்ளது. அன்றைய தினம் சூரியன் மேற்திசையில் மறையும் போது வியாழன் கோள் கீழ் திசையில் தெரிகிறது.

இதற்கு முன்னதாக கடந்த 1963 ஆம் ஆண்டு இதுபோன்ற நிகழ்வு வானில் நிகழ்ந்திருக்கிறது. அப்போது வழக்கத்தை விட பெரிதாகவும், பிரகாசமாகவும் வியாழன் கோள் தெரியும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தற்போது 59 ஆண்டுகள் கழித்து நடைபெறும் இந்த நிகழ்வை தொலைநோக்கி மூலம் காணலாம்.

அப்போது வியாழனை சுற்றிவரும் நான்கு பெரிய துணைக்கோள்களையும் காணலாம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# அடைந்ததை அழித்தல்

ஒரு கடற்கரையிலே பெரிய நாவல்மரம் ஒன்றிருந்தது. அதில் எப்பொழுதும் பழங்கள் இருந்துகொண்டேயிருக்கும். அந்த மரத்தில் ரக்தமுகன் என்றொரு குரங்கு இருந்துவந்தது.

ஒருநாள் கராலமுகன் என்ற பெரிய முதலை ஒன்று அந்த நாவல் மரத்தின் அருகில் வந்தது. ரக்தமுகன் அதைப் பார்த்து, "நீ என் விருந்தாளி. அமுதத்துக்கொப்பான நாவற்பழங்களைத் தருகிறேன். சாப்பிடு!" என்று குரங்கு கூறி, நாவற்பழங்களை முதலைக்குக் கொடுத்தது.

பழங்களை முதலை சாப்பிட்டது. வெகுநேரம் குரங்குடன் பேசி இன்பமடைந்தபின் தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றது. இப்படியே நாள்தோறும் முதலையும் குரங்கும் நாவல்மரத்தின் நிழலையடைந்து நல்ல விடயங்களைப் பற்றிப் பேசி இன்புற்றுக் காலம் கடத்தி வந்தன. தான் சாப்பிட்டது போக மிஞ்சிய நாவற்பழங்களை முதலை வீட்டுக்குக் கொண்டுபோய் தன் மனைவிக்குக் கொடுத்து வந்தது.

ஒருநாள் முதலையின் மனைவி, "அமிர்தம் போலிருக்கும் இந்த நாவற்பழங்கள் உங்களுக்கு எங்கே கிடைக்கிறது?" என்று முதலையைக் கேட்டது.

"அன்பே, ரக்தமுகன் என்றொரு குரங்கு இருக்கிறது. அது என் நெருங்கிய நண்பன். அதுதான் இந்தப் பழங்களை எனக்கு அன்போடு தருகிறது" என்றது முதலை.

அதற்கு முதலையின் மனைவி, "அமிர்தம்போல் இருக்கும் இந்தப் பழங்களை எப்போதும் சாப்பிட்டுக் கொண்டிருப்பவனுடைய நெஞ்சும் கட்டாயம் அமிர்தம் போலத்தான் இருக்கும். நீ என்னை மதிக்கிறாய் என்றால் எனக்கு அந்தக் குரங்கின் நெஞ்சைக் கொண்டுவந்து கொடு. அதை நான் சாப்பிட்டு நோயும் முதுமையும் இல்லாமல் என்றும் உன்னோடு விளையாடிக்கொண்டிருப்பேன்" என்றது.

"அன்பே, முதலாவதாக அது நமக்குச் சகோதரன் மாதிரி. இரண்டாவதாக, அது நமக்குப் பழங்களைத் தருகிறது. எனவே அதை நான் கொல்லமுடியாது. இந்த வீணான ஆசையை விட்டுவிடு." என்றது.

அதற்கு முதலையின் மனைவியோ, "அந்த குரங்கை எனக்காக கொடுக்கவில்லை என்றால் நான் இறந்துவிடுவேன்" என்று சொல்லி கோவமாக சென்றது.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அதன் கண்களில் நீர் நிறைந்தது. "இனி நான் என்ன செய்வேன்? அந்தக் குரங்கை எப்படிக் கொல்வது?" என்று சிந்தித்தபடியே குரங்கிடம் போயிற்று.

வெகுநேரம் கழித்து முதலை கவலையோடு வருவதைக் குரங்கு பார்த்தது.

"நண்பனே, ஏன் இவ்வளவு நேரம்? ஏன் சந்தோஷத்தோடு பேசமாட்டேன் என்கிறாய்? நல்ல நீதிகளையும் சொல்ல மாட்டேன் என்கிறாய்?" என்று குரங்கு கேட்டது.

"நண்பனே, என் மனைவி 'ஏ நன்றி கெட்டவனே, என் முகத்தில் விழிக்காதே. தினந்தோறும் நீ நண்பனிடம் பழங்களைப் பெற்றுச் சாப்பிடுகிறாய். ஆனால் அதற்குப் பதில் உபசாரம் செய்யும் முறையில் அதை உன் வீட்டு வாசலுக்கும் நீ அழைத்து வரவில்லையே! இந்த செயலுக்கு உனக்கு மன்னிப்பே கிடையாது என்றது.

ஆகவே, "நீ கராலமுகனை நம் வீட்டுக்கு அழைத்து வா. அப்போதுதான் நீ பதில் உபசாரம் செய்ததாகும். இல்லாவிட்டால் நீ என்னை இனிமேல் உயிரோடு பார்க்க முடியாது. மறு உலகத்தில் தான் பார்க்க முடியும்" என்று சொன்னாள். அவள் சொற்களைக் கேட்டுவிட்டு உன்னிடம் வந்திருக்கிறேன்.



"உன் விடயமாய் அவளோடு சண்டை போட்டதிலே இவ்வளவு நேரமாகிவிட்டது. நீ என் வீட்டுக்கு வா! என் மனைவி ஆவலோடு உன்னை எதிர்பார்த்து, வரவேற்பதற்குரிய ஏற்பாடுகளை செய்திருக்கிறாள்." என்றது முதலை.

"நண்பனே, அண்ணி சொன்னது சரிதான். எவ்விதமெனில், தருவது, பெறுவது, மனம்விட்டுப் பேசுவது, கேட்பது விருந்து உண்பது, படைப்பது, இவை ஆறும் நட்புக்கு அடையாளங்கள் அல்லவா? ஆனால், நான் காட்டிலும் இருப்பவனாயிற்றே! உங்களுடைய வீடு நீருக்கடியில் அல்லவா இருக்கிறது! அங்கே நான் எப்படி வரமுடியும்?" என்றது குரங்கு.

"நண்பனே, கடலுக்கடியில் ஒரு அழகிய மணல் திட்டில் என்வீடு இருக்கிறது. எனவே என் முதுகில் ஏறிக்கொண்டு பயமில்லாமல் இன்பமாய் வா!" என்றது முதலை.

குரங்குக்கு ஆனந்தம் பிறந்தது. "நண்பனே, அப்படியானால் சீக்கிரமாகக் கிளம்பலாமே, ஏன் தாமதிக்க வேண்டும்? இதோ நான் உன் முதுகின்மேல் ஏறிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு, குரங்கு முதலையின் முதுகின்மேல் ஏறிக்கொண்டது.

ஆனால், ஆழமான கடலில் முதலை போவதைப் பார்த்துக் குரங்கு பயந்து நடுங்கிப்போயிற்று. "அண்ணா மெதுவாகப் போ! அலைகள் அடித்து என் உடம்பெல்லாம் நனைந்துவிட்டது" என்றது.

அதைக் கேட்டதும் முதலைக்கு ஒரு யோசனையுண்டாயிற்று. இந்தக் குரங்கு என் முதுகிலிருந்து நழுவினால் ஒரு அங்குலம் கூட அப்பால் செல்லமுடியாது, அத்தனை ஆழமான கடல் இது. என் பிடியில் சிக்கிக் கொண்டுவிட்டது. ஆகவே இதனிடம் என் நிஜ நினைப்பைச் சொல்லிவிடுகிறேன். தன் இஷ்ட தெய்வத்தை அது நினைத்துப் பிரார்த்தித்துக் கொள்ளட்டும் என்று எண்ணியது.

குரங்கைப் பார்த்து, "நண்பனே, என் மனைவி சொல்லியபடி உன்னை நம்பவைத்து, உன்னைக் கொல்வதற்காக வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். இனி உன் இஷ்ட தெய்வத்தை பிரார்த்தித்துக்கொள்" என்றது முதலை.

"அண்ணா, உனக்கோ அண்ணிக்கோ நான் என்ன தீங்கு செய்தேன்? என்னை ஏன் கொல்லப்பார்க்கிறீர்கள்?" என்று குரங்கு கேட்டது.

"கேள், நீ கொடுத்த பழங்கள் அவளுக்கு அமிர்தம் போல் ருசியாயிருந்தன. ஆகவே உன் நெஞ்சைத் தின்ன வேண்டும் என்று அவள் ஆவலாயிருக்கிறாள். அதனால்தான் இப்படிச் செய்தேன்" என்றது முதலை.

உடனே சமயோசித புத்தியுள்ள குரங்கு, "அடடா அப்படியா சங்கதி? அதை நீ ஏன் அங்கேயே என்னிடம் சொல்லவில்லை? நண்பனே, ருசி மிகுந்த நாவற்பழங்களை நாவல்மரத்தின் பொந்தில் மறைத்து வைத்திருக்கிறேன். முன்பே சொல்லியிருந்தால் அண்ணிக்காக அதை எடுத்துக்கொண்டு வந்திருப்பேனே! அந்த ருசி மிகுந்த நாவற்பழங்களை சாப்பிட்டால் நீண்ட காலம் இளமையுடன் உயிர் வாழலாம்!" என்றது குரங்கு.

அதைக் கேட்டதும் முதலைக்கு ஆனந்தம் ஏற்பட்டது. "நண்பனே, அப்படியானால் அந்த நாவற்பழங்களை எனக்குக் கொடு, என் துஷ்ட மனைவி அதைச் சாப்பிட்டு தன் உபசாவத்தை முடிப்பாள். உன்னை நாவல் மரத்துக்கே திரும்ப அழைத்துச் செல்கிறேன்" என்று சொல்லிற்று.

சொன்னபடியே முதலை நாவல்மரத்தடியை நோக்கித் திரும்பிச் சென்றது. வழி நெடுக குரங்கு ஒவ்வொரு தெய்வத்தையும் நூற்றுக்கணக்கான முறை வேண்டிக் கொண்டே போயிற்று.

எப்படியோ ஒருவிதமாக கரைக்கு வந்ததும், உயர உயரத் தாவிக் குதித்துச் சென்று அந்த நாவல் மரத்தின்மேல் ஏறிக்கொண்டது. ஏறிக்கொண்டே, "நல்ல காலம்! நான் பிழைத்துக்கொண்டேன். நம்பிக்கை வைக்கத் தகாதவனிடம் நம்பிக்கை வைக்காதே! நம்பிக்கையானவனையும் நம்பாதே! நம்பிக்கை வைப்பதால் விபத்து ஏற்பட்டு வேரோடு அழித்து விடுகிறது. என்று சொல்வதில் நியாயமிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு நிஜமாக நான் மறுபிறப்பெடுத்திருக்கிறேன்" என்று குரங்கு எண்ணியது.

குரங்கிடம் முதலை, "நண்பனே, நாவற்பழங்களை கொடு எனக்கு" என்றது.

குரங்கு சிரித்துவிட்டு நிர்ப்பயமாகப் பதில் சொல்லிற்று. "சீ, மூடா! நம்பிக்கைத் துரோகி! உன்னுடைய உண்மையான குணம் எனக்கு தெரிந்துவிட்டது. உன் வீட்டைப் பார்த்துக்கொண்டு போய்விடு. இனிமேல் இந்த நாவல் மரத்தடிக்கு வராதே! என்றது குரங்கு.

"முட்டாள்தனமாக இதனிடம் என் எண்ணத்தை ஏன் வெளியிட்டேன்? எப்படியாவது இதனுடைய நம்பிக்கையைப் பெற வழியுண்டா? நம்பவைக்கப் பேசிப்பார்க்கிறேன்" என்று எண்ணியது.

"நண்பனே, விளையாட்டுக்காகத்தான் அப்படிச் சொன்னேன். உன் மனதையறிய விரும்பினேன். அவ்வளவுதான். என் வீட்டுக்கு விருந்தாளியாக வா! அண்ணி உன்னைப் பார்க்க ஆவலோடிருக்கிறாள்" என்று முதலை சொல்லிற்று. "துஷ்டா, உடனே நீ போய்விடு. நான் வரமாட்டேன்" என்றது குரங்கு. அதைக்கேட்டு முதலை மிகுந்த வெட்கமடைந்தது. அந்த இடத்தை விட்டுச் சென்றது.

**நீதி: ஒருவன் மற்றவர்களை ஏமாற்ற நினைத்தால், கண்டிப்பாக ஒருநாள் எல்லாவற்றையும் இழந்து ஏமாறுவான்!**

# பழமொழிகள்

1. அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்.
2. துள்ளுகிற மாடு பொதி சுமக்காது.
3. தன்னைப் போல் பிறரை நினை.
4. அய்யர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது.
5. இறந்த காலத்தை என்றும் பெற இயலாது.
6. காலம் பொன் போன்றது.



7. உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து ஆகாது.
8. நிறைகுடம் ததும்பாது, குறைகுடம் கூத்தாடும்.
9. எலி வலையானாலும், தனி வலை ஆகாது.
10. இறைக்கிற ஊற்றே சுரக்கும்.
11. எறும்பு ஊர கல்லும் தேயும்.
12. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
13. ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது.
14. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்.
15. ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள்.



RADIANT DAWN
A Sunday Supplement in English to Kalaikkathir
Page I English for all Sunday the 25th of Septmber 2022

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

# Another Way of Seeing Things

Mrs. Curtis said, "Make sure you write this assignment down, everyone. It's important."
"Mrs. Curtis," Linda said, raising her hand. "I can't see the assignment clearly."
Mrs. Curtis suggested, "Come up to the front of the room to copy it, Linda."
Linda moved to the front of the room, copied the assignment into her notebook, and returned to her seat. When class was over, Mrs. Curtis asked Linda to remain. "I'm concerned, Linda, because it seems you're having trouble seeing the board. Am I right?" "Sometimes," Linda admitted.
"The school nurse will be checking everyone's vision tomorrow. You should probably tell her about it," Mrs. Curtis said.

**1. Which title would best fit this text?**
A. School Day B. A Problem in Class
C. Assignment Time D. Mrs. Curtis's Day

**2. Why does Linda move to the front of the room?**
A. She cannot hear Mrs. Curtis.
B. She cannot see the board.
C. She lost her pen.
D. She spilled water on her desk.

**3. What does remain mean in this text?**
A. to leave B. to stay behind
C. to be left over D. to be important

**4. Which is a synonym for assignment?**
A. task B. board
C. notebook D. paper

**5. Which word describes Mrs. Curtis and her feelings?**
A. important B. checking
C. unsympathetic D. concerned



Linda sat quietly in the school nurse's office. She had her vision checked. Now the nurse was writing the results on a form. "Do you think I need glasses?" Linda inquired.
"You're definitely having difficulty seeing objects that are far away," the nurse answered.
"You'll want to give this form to your parents. Ask them to take you to an optometrist, who will check your vision. If you do need glasses, the optometrist will be able to help you find the right ones for you."
"That doesn't sound so bad," Linda said with relief.
"It's not bad at all," the nurse explained. "Eye exams aren't painful, and you could end up seeing much more clearly."

**1. Which best summarizes the text?**
A. The school nurse checks Linda's vision.
B. The teacher insists that Linda sit in the front of the classroom.
C. Linda's teacher gives a surprise test to the class.
D. Linda is told to come back to the nurse's office tomorrow.

**2. What is the setting?**
A. at an optometrist's office B. at Linda's home
C. in the school nurse's office D. in the cafeteria

**3. Which definition of the word form is used in this text?**
A. a shape B. a piece of paper
C. to create D. to come together

**4. What is a doctor who checks vision and prescribes glasses called?**
A. an architect B. a geologist
C. a school nurse D. an optometrist

**5. If a character says something with relief, how is he or she likely feeling?**
A. at ease B. worried
C. angry D. proud

The nurse at Linda's school noticed that Linda was having difficulty seeing objects that were far away. So she suggested that Linda get her vision checked. Linda took the nurse's report home and showed it to her parents.

"It looks as though we should make an appointment for you with an optometrist," her dad said with concern.

"I think so, too," her mom agreed. "We need to make sure that you can see clearly."

"The nurse told me that eye exams aren't painful," Linda said.

"She's right," her dad reassured her. "And if you need glasses, you will get to choose frames that you like. There are lots of styles, so you will have plenty of options."

**1. What does the first paragraph of the text tell the reader?**
A. The text is about sunglasses.
B. The text is about a quiz.
C. The text is about how our eyes work.
D. The text is about an eye exam.

**2. Which statement is not included in the text?**
A. There are not many styles of frames.
B. Eye exams do not hurt.
C. Linda will have plenty of options.
D. Linda can choose frames she likes.

**3. What does options mean in the text?**
A. frames B. glasses
C. choices D. optometrists

**4. Which is an antonym of concern?**
A. fear B. indifference
C. anger D. worry


**5. What does the text tell the reader about Linda's parents?**
A. They are frustrated with Linda.
B. They do not trust the school nurse.
C. They are calm and reassuring.
D. They are worried but trying to hide it.

# Another Way of Seeing Things

Linda and her parents went to the optometrist's office. Linda was having trouble seeing objects that were far away. Her mom and dad wanted the doctor to check Linda's vision. Her mom gave their name to the person at the front desk. Then the family took seats in the waiting room and her mom filled out some forms. After a few minutes, it was Linda's turn.

First, the doctor took special pictures of Linda's eyes. Then, he asked Linda some questions about her eyes. He asked if Linda's eyes ever hurt her. He also wanted to know if her eyes ever got very tired. Linda answered the doctor's questions. She told him that her eyes didn't hurt. But she also told him she had trouble seeing the board in class.

Then, it was time to check Linda's vision. The doctor showed Linda several rows of letters. He asked her to read the letters in each row. She had trouble reading the small letters. Then the doctor put special lenses in front of Linda's eyes. All of a sudden, the letters were clear! For a while, Linda and the doctor worked to find the best lenses for her. The doctor would ask which lens made the letters easiest to see, and Linda would tell him. He showed her several lenses that didn't work well, and some that worked, but not well enough. Finally, they chose the lenses that were best for Linda. The doctor wrote down which lenses they chose, and then he told Linda, "Please give this form to the opticians in the front office. They will help you pick out frames for your glasses."




Linda and her family went to the front office and took seats. When it was her turn, Linda handed the paper the doctor had given her to the optician. Then, the optician said, "It's time to pick out the frames you want to have. How about if you tell me what colors you like, and we'll get to work." Linda agreed, and soon she began trying on frames.

After a while, Linda found exactly the frames she wanted. Linda thought they looked very good on her, and her mom and dad thought so, too. "Now I'll be able to see everything," Linda said with a smile.

## Read the text and then answer the questions.

**1. How does Linda feel about getting new glasses?**
A. She is happy. B. She is miserable.
C. She is afraid. D. She is furious.

**2. Which is a prediction for what will happen after Linda gets glasses?**
A. She will sit in the front of the room.
B. She will need new glasses.
C. She will be able to see the board.
D. She will not be able to see anything.

**3. Which purpose for reading is most appropriate for this text?**
A. to learn about choosing eyeglasses
B. to understand why some people wear glasses
C. to form an opinion about why a family argues
D. to understand what happens when a person has an eye exam

**4. Linda has trouble reading small letters. What is the solu tion?**
A. The doctor moves the letters closer.
B. The doctor shows her lenses that make the letters clear.
C. The doctor shines light on the letters.
D. The doctor makes the letters bigger.

**5. What happens after the doctor asks Linda questions?**
A. The family goes to the optometrist.
B. He takes pictures of Linda's eyes.
C. Her mom fills out the forms.
D. He shows her rows of letters.

**6. How does the doctor feel about Linda?**
A. He wants her to be afraid of glasses.
B. He hopes that she is late for her appointment.
C. He wants her to see clearly.
D. He hopes that she loses her glasses.

**7. What is a theme of this text?**
A. Doctors do not always have the answers.
B. Asking questions is foolish.
C. Getting help for a problem can make you feel better.
D. Headaches require taking medicine.

**8. Which text would have a theme similar to this text?**
A. a poem about doctors
B. an advertisement for sunglasses
C. a story about a boy getting an X-ray to determine if he has a broken bone
D. a diagram of the brain



# A Pit Brimmed with Water

Long ago, a pond was dug by a very affluent king and it was announced that one person from each household would have to bring a glass of milk during the night and pour it into the pond. So, the pond should be full of milk by the morning. After receiving the order, everybody went home. One of the denizens of the kingdom made up his mind to take milk but after pondering for a while he thought, "Since everyone will bring milk, I could pour water in place of milk because it would be hard to see in the

twilight." He quickly poured the water and came back. In the morning the king was astonished to see the pond filled with water only. It so happened that everyone thought like the denizen, "I will not pour the milk; someone else will do."

**Moral : Don't neglect your duty.**

# The Top 16 Outfits Guys Find Most Attractive

If you want to catch a guy's attention, your outfit may be one of the first things he notices. While you don't always need to dress for men, it's really fun spicing up your wardrobe with clothes that turn him on. Keep reading for a ton of recommendations on some fun and sexy pieces to add to your closet so he's sure to check you out when you wear them!

***1. Anything red***

Guys associate the color red with romance and attraction. To make red the star of your outfit, look for a fun and flirty top or a bright dress that makes you stand



out from the crowd, If you want to be a little more subtle, put on a red scarf, try some sexy scarlet heels, or don some chunky accessories to complete your look.

If you don't currently have any red clothes in your closet, add a pop of color to your look with some bright lipstick or makeup.

A burgundy blazer can be super eye-catching with a pair of black pants and red shoes.

***2. Lace***

Image titled What Clothing Do Guys Find Most Attractive Step 2



You'll look gorgeous in a lacy top or dress. The delicate lace patterns and sheer fabric really draw in his eye, so be sure to include it in your wardrobe. Get ready for a night out with a colorful, lacy dress or black lace blouse with a pair of slacks. Just keep your accessories elegant and simple, like metal bracelets or monotone shoes, so you don't distract from the lace pattern.

If you really want to turn him on, try putting on a sheer top with a lacy bralette underneath.

Try a white lacy top with a pair of jeans for a good casual, but attractive look.

***3. Sleeveless tops***

Guys love the look of your long, slender arms. If it's warm enough outside, put on a tank top or sleeve-



less blouse that shows off your upper arms. Pair your look with a nice pair of jeans, a flirty pair of shorts, or a skirt to complete your outfit.

Bring a jacket to complete your look and to stay warm if it gets a little colder.

Try a red sleeveless top with some black pants to really stand out.

Spaghetti strap tops work great if you want a delicate feminine look, while a racerback top can make you look more athletic.

***4. Off-the-shoulder tops***

Image titled What Clothing Do Guys Find Most Attractive Step 4



Drive him wild by exposing your neck and shoulders. Put on a strapless bra so nothing gets in the way of his view of your shoulders. Raid your closet for any blouse that hangs off of one or both of your shoulders and pair it with a nice pair of pants or jeans. Oversized sweaters with a pair of shorts work really well too since you can slide it off of one of your shoulders for an even flirtier look.

Some tops may even have sleeves with cutouts so you can stay warm and still show off your shoulders.

***5. Crop tops***

Show off your tummy to really catch his eye. Guys are really turned



on if they see your midriff, which is the area right above your waist. Find a top that ends right below your bust, like a loose cut-off T-shirt or tight-fitting garment. Pair your crop top with your favorite bottoms for the season, like shorts or a skirt in the summer or a nice pair of jeans when it's colder.

Look for crop tops that have lacy embellishments on them to add a delicate and feminine touch.

If you want to be a little more modest, look for long-sleeved crop tops to wear with a nice pair of jeans or slacks. Wear flats or boots to complete your look.

***6. Bodycon clothes***

Tight-fitting garments leave little to his imagination. Choose a few clothes that fit you really well and hug your body so you can



show off your figure. Tight athletic tops and bodycon dresses both work really well for teasing him. Just make sure you don't try to squeeze into anything too tight, or else you might be really uncomfortable the longer you wear it.

If you want the option to be a little more modest, bring a long jacket or flowy top that you can easily wear over bodycon clothes.

Try a tight red bodycon dress with some heels for a truly sexy, eye-catching style.

***7. Leather jacket***

A leather jacket can really complete a stylish, but edgy look. While the standard is a black leather jacket, don't be afraid to switch it up and go with some bold colors, like red, white, or brown. You can pair your jacket with pretty much anything, like a blouse with ripped jeans, a sexy dress, or a blouse



with a tight skirt.

Keep your look even more mysterious and alluring by wearing sunglasses.

Nothing beats the classic look of a leather jacket, a white tee, a pair of skinny jeans, and your favorite sneakers.

***8. T-shirt and jeans***

This classic, casual look is perfect for everyday activities. You



don't always have to get dressed up to catch his eye. Start with a monotone shirt, your favorite band tee, or a top that has an interesting graphic or design on it. Complete your look with a pair of skinny jeans that fit tight on your legs.

If you're already close with a guy, try putting on one of his old T-shirts for your outfit. It'll really catch his eye when he sees you in his clothes.

***9. Yoga pants***

Yoga pants hug your legs for a perfect athleisure look. Yoga pants



aren't just for practicing your poses – they look super flattering on a lot of different body types! Get a pair of black yoga pants and pair them with your favorite tops. You can mix and match pretty much any casual clothing to complete your look.

Try yoga pants with a sports bra, zip-up sweatshirt, and some sneakers for a really athletic look.

For something more comfortable, try an oversized sweater with a pair of loafers or flats.

***(see page 11)***

***10. Leggings***

Leggings fit pretty tight without being too revealing. You can never go wrong with a pair of black leggings, but don't be afraid to try some funky patterns or fabrics if you want something new. Since leggings are so versatile, you can pair them with a flowy blouse, a comfy T-shirt, or a crop top. Since leggings fit tight around your ankle, they work really well with loafers, boots, or a sexy pair of heels.




If you want a sexy, edgy outfit, put on a crop top, leather jacket, leggings, and a flashy pair of heels.

For a casual look, try putting on a bright red chunky sweater with a pair of black leggings and sneakers.

***11. Romper***

Stick with attention-grabbing patterns and low necklines for an alluring look. Rompers or jumpsuits are perfect for warm summer days. If you're looking for a casual style, try a denim or chambray romper with your favorite pair of sneakers or sandals. For something a little sexier, wear a romper made from lace, satin, or silk to draw his eye in.



Rompers may fit a little loose, but you can easily accentuate your figure by adding a belt around your waist.

Some rompers are cut like shorts while others have full pants. Pick whichever you want depending on how much skin you want to show.

***12. Little black dress***

A tight black dress is a sexy staple for anyone's wardrobe. A black dress never goes out of style and it's perfect for every occasion. Even though the dress should mostly be black, it might grab his attention more if it has a small pattern or embellishments like sequins on it to make you stand out from the rest of the crowd.




Since a little black dress has a simple design and pattern, really show off some fun accessories like a patterned heel, chunky jewelry, or a stylish jacket.

Draw attention to your waist by wearing a colorful belt.

***13. Sundress***

Sundresses are perfect for giving off a light, summery vibe. Sundresses come in so many different colors and patterns that you're sure to find something that fits your style. Wear the dress on its own with a pair of sandals or sneakers, or experiment with layers, like a light cardigan, a denim jacket, or a loose off-the-shoulder sweater.



Sundresses work well with your favorite sandals, flats, or sneakers.

You can even wear a shirt or crop top under your sundress if you want to be a little more modest.

***14. Short skirts***

If it's not too cold, flaunt your legs. If you want to show off the curves of your waist, stick with a tighter skirt that hugs your thighs. For an outfit that's a little more fun or flirty, look for a skirt that's a bit looser so guys can get a better view of your legs. You can keep your skirt a simple single color, or go for a fun pattern or fabric to catch his attention even more.



Be careful when you're moving around or sitting down so your skirt doesn't accidentally ride up.

Put on a pair of heels that match your outfit to really make your legs look longer and sexier.

If you want to be a little more modest, try wearing some tights or tall socks.

***15. Knee-high socks***

Draw more attention to long legs with this sexy accessory. Knee-highs work best if you're wearing shorts, a dress, or a skirt since guys are probably already checking out your legs. Pull the socks tight up to your knees or mid-thigh if you have the extra length. Pair your socks with some chunky loafers for a laid-back look or heels if you're going out on the town.



Sheer tights also work really well for accentuating your legs.

An oversized sweater, short shorts, and tall socks with loafers make a great casual, but attractive look.

***16. High heels***

You'll get more attention if you have a taller heel. Heels make your legs look longer, which can really make guys go crazy over you. Choose a pair of heels that complements the colors of the rest of your outfit.



You could even go for a funky pattern if you want to use your heels as an accent piece.

Heels work really well with dresses, rompers, or jumpsuits for an elegant appearance.

Cross your legs when you're sitting down to put your shoes on display and make guys notice them faster.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# பருக்களுக்கு இயற்கை மருத்துவம்





முகப்பருக்களால் அதிகம் அவஸ்தைப்படுவர் பலர் உள்ளனர். முகப்பருக்களானது சருமத்தின் பொலிவைக் கெடுத்துவிடும். முகத்தில் பருக்கள் வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகம் உட்கொள்வது, மன அழுத்தத்தில் பாதிக்கப்பட்டிருப்பது, உடலில் ஹார்மோன் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது, சருமத்தை சரியாக பராமரிக்காமை போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றை இயற்கையான முறையில் கையாளுவது எப்படி என்பதைப் பார்க்கலாம்.

**எலுமிச்சை**

எலுமிச்சை சாற்றை இரவில் படுக்கும் போது சிறிது நீரில் கலந்து, பருக்களின் மேல் தடவி மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இது பருக்களில் உள்ள பஸ்ஸை நீக்கி அதில் உள்ள பற்றீயாவைக் கொல்ல உதவும்.

**கிறீன் டீ**

கிறீன் டீ செய்து, அதனை ஐஸ் கியூப்பில் ஊற்றி ப்ரீசரில் வைத்து ஐஸ் கட்டிகளாக்கி, பின் அதனை முகத்தில் சிறிது நேரம் தேய்த்தால், அவை விரைவில் பருக்களை மறையச் செய்யும். இதில் உள்ள ஆண்டி ஆக்சிடெண்ட்ஸ் உங்கள் சருமத்தை பாதுகாப்பதோடு பொலிவைத் தரவும் உதவும்.

**லாவெண்டர்**

லாவெண்டர் எண்ணெயை பருக்களின் மீது தடவி வந்தால் பருக்களை விரைவில் நீக்கிவிடும். ஆனால் இந்த எண்ணெயை அனைவருக்குமே நல்ல பலனைத் தரும் என்று சொல்ல முடியாது. சிலருக்கு இந்த எண்ணெய் அரிப்பை ஏற்படுத்தலாம். எனவே உங்களுக்கு எந்த பிரச்சினையும் ஏற்படாமல் இருந்தால், இதனை பயன்படுத்தலாம். இது உங்கள் மனதையும் சருமத்தையும் ரிலாக்ஸ் செய்ய உதவும்.

**முட்டை**

முட்டையின் வெள்ளைக்கருவை முகத்தில் தடவி உலர வைத்து பின் கழுவினால், அவை முகத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகளை அகற்றுவதோடு, பருக்கள் இருந்தாலும், அதனை விரைவில் குணமாக்கும்.

**அப்பிள் சைடர் வினிகர்**

அப்பிள் சைடர் வினிகரை ஒரு நாளைக்கு இரண்டு முறை தண்ணீரில் கலந்து முகத்தில் தடவ வேண்டும். இதை முகத்தை கழுவியவுடன் செய்வது சருமத்தின் அமிலத்தன்மையை சரி செய்யும். இப்படி தினமும் செய்து வந்தால், பருக்கள் போய்விடும்.

## மருத்துவக் கதிர்



# உடல் வலுப்பெற, உடல் எடை குறைய வழிவகைகள்



**சூரிய நமஸ்காரம்**

சூரிய நமஸ்காரம் மொத்தம் 12 ஆசனங்களைக் கொண்டது. வேலை காரணமாக காலையில் யோகா செய்ய நேரம் இல்லாதவர்கள் இந்த ஒரு ஆசனத்தை யாவது தினமும் செய்யுங்கள். இந்த சூரிய நமஸ்காரத்தைச் செய்வதால் நுரையீரலின் செயல்பாடுகள் மேம்படுகிறது. டயபெட்டீஸ் வருவதற்கான காரணிகளைக் கட்டுப்படுத்துகிறது. தசைகளை வலுபெறச் செய்கிறது. ஹைபர் டென்ஷன் ஆகாமல் இருக்க உதவுகிறது. பெப்டிக் அல்சர் வருவதைத் தடுக்கிறது. சியாடிகா எனும் கீழ் முதுகு வலி, மூட்டு வலி ஆகியவற்றை தடுக்கிறது. மாதவிடாய் இருப்பவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் இதனைச் செய்ய வேண்டாம்.

**மூச்சுப் பயிற்சி**

இந்த மூச்சுப் பயிற்சியை உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்கலாம். தினமும் 10 நிமிடங்களாவது இதில் குறிப்பிட்டதுபோல மூச்சுப் பயிற்சி செய்வதன் மூலம் மனது ஒருநிலை அடையும். தேவை இல்லாத தவறான எண்ணங்கள் தோன்றுவதைக் குறைக்கும். மூளை சுறுசுறுப்படைவதோடு, நீங்கள் செய்யும் வேலையில் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துகிறது. மேலும் கோபம், பயம், பதற்றம் அனைத்தையும் குறைத்து மனதை அமைதிப்படுத்த நிச்சயம் இந்த மூச்சுப்பயிற்சி உதவும். மாடிப்படிகட்டுகளில் ஏறினால் மூச்சு வாங்குகிறதா, கண்டிப்பாக இதனை முயற்சி செய்து பாருங்கள். மூச்சுவாங்குவது கண்டிப்பாகக் குறையும்.

உடல் எடை குறைய: சலபாசனம்
பெண்கள் அவசியம் செய்ய: புஜங்காசனம்
(கர்ப்பிணிப் பெண்கள் தவிர்க்கவும்)
தலைவலி போக்க: சங்காசனம்
முதுகு, கால்களுக்கு வலு சேர்க்க: வஜ்ராசனம்
இடுப்புச் சதையைக் குறைக்க: வக்ராசனம்



# கெட்ட கொழுப்பில் இருந்து இதயத்தைப் பாதுகாக்கும் ஐந்து உணவுப்பொருள்கள்

மனித உடலில் தங்கியிருக்கும் அதிகளவிலான உடற்கொழுப்பு அல்லது தீய கொலஸ்ட்ரால் அளவை சரியான உணவுப்பழக்கத்தின் மூலமாக சரிசெய்யலாம் என்கின்றன ஆய்வுகள். உடலில் சேரும் அதிக கொழுப்பு, ஹார்ட் அட்டாக், ஸ்ட்ரோக் போன்றவற்றிற்கான அபாய அளவினை அதிகரிக்கிறதாம்.

'ஹைப்பர்கொலஸ்ட்ரோலெமியா' என்கிற மருத்துவப் பெயரால் அழைக்கப்படும் அதிகப்படி கொலஸ்ட்ரால், ரத்தக்குழாய்களில் எக்கச்சக்கமாக கொழுப்பு மற்றும் எடைகூட்டும் பொருள்கள் சேர்வதால் ஏற்படுகிறது. இதனால் உடல் ரத்த ஓட்டம் குறைந்து, நெஞ்சுவலி, திடீர் வலிப்பு நோய் போன்றவற்றிற்கான ரிஸ்கை அதிகமாக்குகிறது. எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உடலில் சேரும் இந்த கொலஸ்ட்ரால் அளவினை ரத்த மாதிரி ஆய்வின் மூலம் மட்டுமே கண்டறிய முடியும்.

கொலஸ்ட்ராலைக் குறைக்கும் உணவுகளை சரியான முறையில் உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலமாக இதயத்தின் ஆரோக்கியத்தை கெட்ட கொலஸ்ட்ராலிடம் இருந்து காப்பாற்ற முடியும்.

ஹோல் க்ரைன்ஸ் எனப்படும் ஓட்ஸ், தினை, பார்லி போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். இவற்றில் உள்ள பீட்டா குளுகன் உடலில் சேரும் கெட்ட கொழுப்பினை அழிக்ககூடிய திறன் கொண்டது.

பீன்ஸ், பட்டாணி, சிவப்பு ராஜ்மா போன்ற பருப்பு வகைகள் புரதச்சத்து வாய்ந்தவை. இதயத்தை பாதிக்கும் ரத்தக் கொதிப்பு, ரத்தக் கொழுப்புக் கட்டிகள் ஆகியவற்றை குறைக்கும் தன்மை கொண்டவை.

பாதாம், வால்நட், வேர்க்கடலை போன்ற நட் வகைகளையும் உணவில் சரிவிகித அளவில் சேர்த்துக்கொள்வது நன்மை பயக்கும். நல்ல கொழுப்பை உற்பத்தி செய்யும் தன்மை கொண்ட இவற்றால், இதயத்திற்கும் நலம். நார்ச்சத்து, மினரல்களையும் அதிகம் கொண்ட உணவுப்பொருட்கள் இவை.

பூண்டில் இருக்கும் மருத்துவ குணம் உடலின் கொழுப்பை குறைக்கும் சக்தி வாய்ந்தது என்கின்றன அறிவியல் ஆய்வுகள். பூண்டில் இருக்கும் அல்லிசின் என்னும் வேதிப்பொருள், உடலில் காணப்படும் கொழுப்புப்புரதத்தை குறைத்து, இதயத்தைக் காக்கக்கூடியது.



பெரிஸ் எனப்படும் பழவகைகள் நார்ச்சத்து அதிகம் கொண்டவை. சிவப்பு ராஸ்பெரிஸ், இனிப்பு செரி, ப்ளூ பெரி, ஸ்ட்ராபெரி ஆகியவை உடலின் கொழுப்பை சமநிலைப்படுத்தக்கூடியவை என்கிறது ஆய்வொன்று. ஆன்டிஆக்சிடண்ட் நிறைந்த இவற்றை டயட்டில் சேர்த்துக்கொள்வது நல்லது.

எனினும், சரியான உணவு முறையுடன் மருத்துவரின் ஆலோசனையும் உடலில் கெட்ட கொழுப்பு சேர்வதில் இருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ள மிக அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.





# செல் என்றால் என்ன?

### செல் என்றால் என்ன?


மனிதன் மற்றும் பிற உயிரிகளின் உடல்கள் எப்படிக் கட்டமைக்கப்பட்டுள்ளன? இதற்கான விடையை இந்த அறிவியல் அறிவோம் பகுதியில் தெரிந்து கொள்வோம்.

ஒரு கட்டடம் பல சுவர்களால் ஆனது. ஒவ்வொரு சுவரும் பல ஆயிரக்கணக்கான அல்லது லட்சக்கணக்கான செங்கற்களால் ஆனது. கட்டடத்தின் அடிப்படை அதன் செங்கற்கள்.

அதுபோல், ஒரு உயிரி என்பது, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செல்களால் கட்டமைக்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு உயிரிக்கும் அதன் அடிப்படை அதன் செல்லாகும்.

உலகில், ஒரு செல் மட்டுமே கொண்ட கண்ணுக்குப் புலப்படாத அமீபா போன்ற உயிரிகளும் உள்ளன. பல கோடி கோடி செல்களால் ஆன திமிங்கலம் போன்ற மிகப்பெரிய விலங்குகளும், ஆலமரம் போன்ற மாபெரும் தாவரங்களும் உள்ளன.

சராசரியாக, ஒரு மனிதனின் உடலில் 30 ட்ரில்லியனுக்கும் (அதாவது, 30 இலட்சம் கோடி) மேலான வெறும் கண்களுக்குப் புலப்படாத நுண்ணிய செல்கள் உள்ளன. 30 ட்ரில்லியன் செல்கள் = 300 ஆயிரம் கோடி = 3 இலட்சம் கோடி = 30, 000, 000, 000, 000 செல்கள்





பல செல்களின் தொகுப்பு திசு என அழைக்கப்படும். பல திசுக்களின் தொகுப்பு ஓர் உறுப்பு பல உறுப்புகளை உள்ளடக்கிய தொகுப்பு, ஓர் உறுப்பு மண்டலம் பல உறுப்பு மண்டலங்கள் சேர்ந்து உருவானது தான் நம் உடல்.

### செல்லின் முக்கிய செயல்கள்

செல்களை அடிப்படையாகக் கொண்டு உடல் கட்டமைக் கப்பட்டுள்ளதை மேலேயுள்ள மனித உடல் கட்டமைப்பு பிரமிடு கோபுர வரைபடம் தெளிவாகக் காட்டுகிறது.

செல்கள் உடலைக் கட்டமைப்பதுடன், இரத்தத்தில் உள்ள ஒட்சிசனின் துணையுடன், நாம் உண்ணும்




உணவிலிருந்து கிடைக்கும் குளுக்கோசை ஆற்றலாக மாற்றுகிறது. இதுவே செல்சுவாசம் என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாறு செல்களின் மூலம் கிடைக்கும் ஆற்றல் தான் நம் உடலிலுள்ள வெவ்வேறு உறுப்புகள், பல்வேறு செயல்களைச் செய்ய உதவுகிறது.

செல்சுவாசத்திற்குத் தேவையான ஒட்சிசன், நுரையீரலில் இரத்தத்தில் கலக்கிறது. ஒட்சியேற்றம் அடைந்த தூய இரத்தம், இதயத்தின் உதவியுடன் உடலில் உள்ள அனைத்து திசுக்களில் உள்ள செல்களுக்கும் சென்றடைகிறது.

மேலும், செல்கள் புதிய செல்கள் உருவாவதற்கான மரபுசார்ந்த தகவல்களை அவற்றின் உட்கரு (நியூக்ளியசில்) தேக்கி வைத்துள்ளன.

### உறுப்பு மண்டலங்கள், உறுப்புகள், திசுக்கள் மற் றும் செல்களுக்கிடையேயான தொடர்பு

நம் உடலில், தசை மண்டலம், எலும்பு மண்டலம், நரம்பு மண்டலம், இரத்த ஓட்ட மண்டலம், செரிமான மண்டலம் போன்ற பல உறுப்பு மண்டலங்கள் உள்ளன.

இரத்த ஓட்ட மண்டலத்தின் முக்கிய உறுப்பு இதயம். இது சிறப்புத் தசைத் திசுக்களாலானது. இதயத் தசைத் திசுக்கள் கோடிக்கணக்கான செல்களால் ஆனவை.

தசை, இரத்தம், எலும்பு, நரம்பு போன்றவை வெவ்வேறு வகையான திசுக்கள். அவை யாவும், தத்தம் அடிப்படை செல்களால் கட்டமைக்கப்பட்டவை. செல்களின் வடிவங்கள் அவை சார்ந்த உறுப்பு மண்டலத்தின் செயலுக்கு ஏற்றவாறு மாறுபடும்.

### செல்லின் அளவு

ஒவ்வொரு செல்லும் 10 முதல் 100 மைக்ரான் அளவுடையது. அதாவது, 1 மில்லிமீற்றரில் நூறில் ஒரு பங்கு முதல், பத்தில் ஒரு பங்கு வரை அளவுடையது.

1 மைக்ரான் என்றால், 1 மைக்ரோமீற்றர், அதாவது 1 மில்லிமீற்றரில் ஆயிரத்தில் ஒரு பங்கு. எடுத்துக்காட்டாக, ஒரு கடுகு ஏறத்தாழ 2.5 மி.மீ அளவுடையது. ஒரு கடுகை 2,500 சம அளவுடைய துண்டுகளாக உடைத்தால் எவ்வளவு சிறிய துகள் கிடைக்கும் என்று எண்ணிப் பாருங்கள். அதன் அளவு ஒரு மைக்ரோ மீற்றராக இருக்கும். செல் எப்படி இருக்கும்?

சரி. கண்களுக்குப் புலப்படாத 10 முதல் 100 மைக்ரோமீற்றர் அளவுடைய இந்த செல்களை எப்படிப் பார்க்க முடியும்?


இவற்றை நுண்ணோக்கி (Microscope) கொண்டு பார்க்கலாம்.

நுண்ணோக்கிகளின் மூலம் ஒரு செல்லை உற்று நோக்கும்போது, அவற்றின் உள்ளே இன்னும் பல நுண்ணிய செல்லுறுப்புகள் இருப்பதை காணமுடியும்.

பொதுவாக, ஒரு விலங்குசெல்லை உற்று நோக்கினால் அவற்றின் செல்லுறுப்புகள் எப்படிக் காட்சியளிக்கும் என்பதைக் கீழே உள்ள படத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மனிதனின் செல்லும் இதேபோன்று தான் காட்சியளிக்கும்.

### விலங்கு செல்லின் அமைப்பு

ஒவ்வொரு செல்லும் இன்னும் பல நுண்ணிய செல்லுறுப்புகளால் ஆனது. இந்த செல்லுறுப்புகள்




எல்லாம் சேர்ந்து ஒரு செல்லைக் கட்டமைப்பதுடன், அவையனைத்தும் பல்வேறு செயல்களைச் செய்கின்றன. செல்லின் வெளிப்பகுதி ஒரு வகையான சவ்வு போன்ற பொருளால் ஆனது. இது, ஒட்சிசன், உணவுப்பொருள், சத்துப் பொருட்கள், நீர் போன்றவை தேவையான அளவு ஊடுருவி செல்லும் விதமாக உள்ளது. செல்லின் உட்பகுதியில் சைட்டோபிளாசம் எனும் ஜெல்லி போன்ற பொருள் உள்ளது. செல்லின் நடுப்பகுதியில் நியூக்ளியஸ் எனும் உட்கரு உள்ளது. மேலும், மைட்டோகான்ட்ரியா, கோல்கை உறுப்புகள், ரைபோசோம்கள், லைசோசோம்கள் மற்றும் பிற செல்லுறுப்புகள் சைட்டோபிளாசத்தில் பொதிந்துள்ளன.

செல்கள் வெவ்வேறு வடிவங்களில் இருந்தாலும், அவற்றின் உள்ளேயுள்ள செல்லுறுப்புகள் பொதுவாக ஒன்றாகக் காட்சியளிப்பதுடன், ஒரே மாதிரி வேலையைச் செய்கின்றன.

# பொது அறிவு கல்விக்கதிர்



- அகரன் -

### நிலவு

நிலவில் இருந்து கொண்டு வானத்தைப் பார்த்தால் வானம் நீல நிறமாகக் காட்சி அளிக்காது. பதிலாக, வானத்தில் இருள் சூழ்ந்தது போல் கருமையாகத் இருக்கும். இதற்குக் காரணம், நிலவில் வளிமண்டலம் இல்லை.

ஆனால், பூமியில் வளிமண்டலம் இருப்பதால், நம் கண்களுக்கு வானம் நீல நிறமாகத் தோன்றுகிறது.

### தவளை

தவளை நிலத்தில் இருக்கும் போது நுரையீரல் மூலம் சுவாசிக்கிறது. ஆனால் நீரில் இருக்கும்போது அதன் ஈரமான தோலின் மூலம் ஒட்சிசனை உள்வாங்குகிறது.

### அப்பிள் மரம்

உலகில் மொத்தம் 7,500 அப்பிள் வகைகள் காணப்படுகின்றன.

அப்பிளில் 25% காற்று நிரம்பி உள்ளது. அதனால் அது நீரில் மிதக்கிறது.

ஒரு அப்பிள் மரத்தின் ஆயுட்காலம் 100 ஆண்டுகள்.

### மனிதனின் பற்கள்

மனிதனின் பற்கள், சுறா மீனின் பற்களுக்கு நிகரான வலிமை கொண்டவை.

### மனிதனின் உமிழ்நீர்

ஒரு நாளுக்கு நம் வாயில் சுரக்கும் உமிழ் நீரின் அளவு ஒரு லீற்றர்.

### மனிதனின் எலும்புகள்

பிறந்த குழந்தையின் உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை முதிர்ச்சியடைந்த மனிதனின் உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கும். அதாவது, குழந்தை பிறந்தவுடன் அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும். குழந்தை வளரும்போது சில எலும்புகள் ஒருங்கிணைகின்றன. பிறகு, முதிர்ச்சி அடைந்த மனிதனாகும் போது, மொத்த எலும்புகளின் எண்ணிக்கை 206 ஆக குறைகிறது.

### மனிதனின் இரத்தம்

சிவப்பு இரத்த அணுக்கள்.

மனித இரத்தத்தை எட்டு வகையான குழுக்களாகப் பிரிக்கலாம். அவை A+, A-, B+, B-, O+, O-, AB+, AB-.

ஒரு முதிர்ச்சியடைந்த மனிதனின் உடலின் எலும்பு மஜ்ஜையில் இருந்து சராசரியாக ஒரு நாளைக்கு 500 கோடி ரத்த சிவப்பணுக்கள் உற்பத்தி ஆகின்றன.

### மனிதனின் மூளை

முதிர்ச்சியடைந்த மனிதனின் எடை சராசரியாக 1.3 கிலோகிராம் முதல் 1.4 கிலோகிராம் வரை இருக்கும்.

மூளையின் எடை உடலின் எடையில் 2% எடையைக் கொண்டது. ஆனால், அது செயல்பட நமது உடலின் ஆற்றலில் 20% ஆற்றலை எடுத்துக்கொள்கிறது.

மனிதனின் மூளைக்கும் உடலுக்கும் உள்ள விகிதம், பூமியிலுள்ள மற்ற பாலூட்டிகளின் மூளைக்கும் அவற்றின் உடலுக்கும் உள்ள விகிதத்தைவிட அதிகமாகும்.

### மனிதனின் வயிறு

நமது வயிற்றில் சுரக்கும் ஹைட்ரோ குளோரிக் அமிலம் உணவைச் செரிமானம் செய்ய உதவுவதுடன் வயிற்றிலுள்ள பற்றீயாக்களையும் அழிக்கிறது.

### புரோட்டீன்கள்


நமது உடலில் 20 சதவீதம் பகுதி புரோட்டீன்களால் ஆனது. புரோட்டீன்கள் நம் உடலின் செல்கள்/திசுக்கள்/உடல் வளர்ச்சிக்கும், உடல் கட்டமைப்பிற்கும் மிகவும் உதவுகின்றன.

### விலங்குண்ணும் தாவரங்கள்


நெப்பந்தீஸ் (Nepenthes), வீனஸ் பூச்சிப் பிடிப்பான் (Venus Fly Trap) போன்ற தாவரங்கள் பூச்சிகளை உண்ணக்கூடியவை.

இவற்றின் குடுவை (ஜாடி) போன்ற அமைப்புடைய பகுதியில், அமரும் பூச்சிகள் குடுவையிலுள்ள திரவத்தால் செரிமானம் அடைகின்றன. நைட்ரேட் சத்து குறைவான நிலப்பகுதியில் வளரும் இவ்வகையான தாவரங்கள் அவற்றுக்கு தேவையான நைட்ரேட் சத்தை பூச்சிகளிடமிருந்து பெறுகின்றன.

# கலைக் கதிர்



## நூல் விமர்சனம் – எனது வாழ்க்கை நாடகம்




படைப்பாளியும் சிறந்த கல்விமானுமாகிய கேணிப்பித்தன் அருளானந்தம் ஐயாவின் எனது வாழ்க்கை நாடகம்(அனுபவ கதைகள்) நூலினை வாசித்து முடித்திருக்கிறேன்.பொதுவாக நூல்களை வாசிக்க தொடங்குகையில் நூல் நகரும் தடமும் கையாளப்படும் மொழி நடையும் வாசகனை இந்த நூலை தொடர்ச்சியாக வாசிக்கலாமா அல்லது இடைவெளி விட்டு வாசிக்கலாமா என்ற எண்ணத்தை தரும். அந்த வகையில் சுமார் ஐந்து மணி நேரத்தில் தொடர்ச்சியாக வாசித்து முடிக்கப்பட்ட நூலாக இது இருக்கிறது.

பொதுவாக இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் ஓய்வு காலங்களில் இதுபோன்ற சுயசரிதைகளை வெளியிடுவது இயல்பே.இவ்வாறான நூல்களில் காலத்தோடு தங்கள் வாழ்க்கை நகர்ந்த கதையினை அனுபவங்களின் வாயிலாக தொகுத்தளித்திருப்பர். இது பின்வரும் தலைமுறைக்கு பல தலைமுறைகள் முந்தைய தங்களது மூதாதையரின் வாழ்வியல் கோலங்கள் கூறுவதாக அமையும். அந்த வகையில் ஆலங்கேணி என்ற ஊரில் பிறந்த கேணிப்பித்தன் அவர்கள் இரண்டாம் உலக மகாயுத்த காலத்திலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகள் வரைக்கும் ஆலங்கேணி ஊரும் தானும் நகர்ந்த பாதைகளை தனது அனுபவங்கள் வாயிலாக தன்னிலையில் விரித்து கூறுகிறார். இவர் புனைவு சார்ந்த பிரதிகளை எழுதியிருந்தாலும் இந்த நூலானது அல் – புனைவினை சார்ந்த வகையினமாகும்.

இந்த நூலினை தான் ஏன் எழுதினேன் என்பதனை பக்கம் 104 இல் பின்வருமாறு கூறுகிறார்.

'தாதுசேன மன்னனின் காலத்தில் வாழ்ந்த மகாநாம தேரர் மன்னனின் வேண்டுகோளின்படியே மகாவம்சம் எழுதினார். அவர் தன்முன் நிகழ்ந்தவற்றையும் சுமார் எழுநூறு வருடங்கள் முன்பு நிகழ்ந்தவற்றையும் தொகுப்பாக்கினார். சில அவர் கண்டவை. பல அவர் கேள்வியுற்றவை. மகாவம்சத்தை இலங்கையர்கள் வரலாற்று நூலாக ஏற்கின்றனர்.இவை உண்மை நிகழ்வுகள் என இந்த நூலை மொழிபெயர்ப்பு செய்த ஜேர்மன் அறிஞர் கிறேசியர் கூறுகிறார். அப்படியாயின் எனது காலத்தில் நான் கண்டவற்றையும் எனது காலத்தில் வாழ்ந்த மூதாதையரின் வாரிசுகளிடம் இருந்து பெற்ற தகவல்களையும் வரலாற்றை தெளிவுபடுத்தும் சான்றுகளாக கொள்ளலாம் அல்லவா? நான் எழுதும் அத்தனையும் இன்று நம் கண் முன்னே உள்ளன.நான் எழுதும் வரலாற்றை எனக்கு பின் வருபவர்கள் அறிய வேண்டும்.

கிட்டத்தட்ட எழுபது ஆண்டுகளை உள்ளடக்கிய இந்த நூலின் கால வரலாற்றை நான் பின்வரும் பிரிவுகளாக காண்கிறேன்.

1.ஆலங்கேணி எனும் கிராமத்தின் வரலாறு.

2.கேணிப்பித்தன் அவர்களின் தன் வரலாறு.

ஆனால் இந்த இரண்டு கூறுகளும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்தவை.

ஆலங்கேணி எனும் கிராமத்தின் வரலாறு.

நான் மட்டக்களப்புக்கு போகும் பாதையில் கிண்ணியாவுக்கு சற்று அப்பால் ஆலங்கேணி எனும் பெயர்ப் பலகையை அடிக்கடி சந்திப்பதுண்டு.ஆனால் இந்த கிராமத்தில் எனது காலடி பட்டது குறித்த இந்த நூல் வெளியிட்டு விழாவின் போதே.

அந்த சந்தியில் இருக்கும் முருகன் கோவிலை அண்டிய கடலூர் கிராமத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் நடை பயணத்தில் இந்த கிராமம் அமைந்திருப்பினும் முன்னாட்களில் அந்த சந்தியில் இருந்து தொடங்கும் பகுதியும் ஆலங்கேணி என அழைக்கப்பட்டதாகவே அறிய கிடைக்கிறது. பிற்காலத்தைய நாட்டு குழப்பங்கள் கிராமத்தின் எல்லையையும் பின்நகர்த்தியது போலும்.

ஆலங்கேணி மண் சார்ந்த புனைகதை ஒன்றினை நாவலாக வெளியிட்ட பெருமை மூதூரின் புகழ்பெற்ற எழுத்தாளர் தோணி வ.அ.இராசரெத்தினம் அவர்களை சாரும்.ஒரு வெண்மணற்கிராமம் காத்து கிடக்கிறது என்ற நாவலாக அது வெளிவந்திருந்தது.

இப்போது அந்த கிராமத்தின் மெய்வரலாறு எனது வாழ்க்கை நாடகத்தில் விரிவாக கூறப்படுகிறது. உண்மையில் இந்த நூலில் சுட்டப்படுவது வெறுமனே ஆலங்கேணி எனும் கிராமம் மட்டுமல்ல. முன்னாட்களில் தம்பலகாமம் கிழக்கு என்றழைக்கப்பட்ட இன்றைய கிண்ணியாவினையும் உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பாகும்.

ஆலங்கேணியை சுற்றிலும் பல்வேறு தமிழ் கிராமங்களை உள்ளடக்கிய மாபெரும் நாகரிகமொன்று வளர்ச்சியுற்று சிதைவடைந்திருப்பதனை இந்த நூலினை வாசிக்கும் வாசகர்கள் அறிந்து கொள்ளலாம். இன்று கைவிடப்பட்டதாயும் வயல்களும் காடுகளும் சூழ்ந்த பகுதிகளில் பல்வேறு அம்மன் ஆலயங்களும் சிதைவடைந்த வகையில் இருக்கும் மாளிகைகளும் பல கதைகளை கூறும்.

விவசாயத்தை தமது தொழிலாக கொண்ட மக்கள் நீர்நிலைகளை அண்டியே தமது குடியிருப்புக்களை அமைத்து கொண்டனர்.இதற்கமைவாக இந்த பகுதியில் பல்வேறு கேணிகளும் நீர்நிலைகளும் காணப்பட்டன. எனினும் அந்நியர் ஆக்கிரமிப்பு மற்றும் மலேரியாவின் தாக்கம் போன்றவையால் மக்கள் கடற்கரை பக்கமாக நகர்ந்து தென்னந்தோப்புகளில் தமது ஜீவனோபாயத்தினை அமைத்து கொண்டிருந்தனர்.எனினும் நாட்டில் இடம்பெற்ற வன்முறைகள் அவர்களை மீண்டும் தமது தொன்மையான இடத்தையும் தொழிலையும் தேடத்தூண்டிற்று.

பொதுவாக ஆலங்கேணி பிரதேசத்தின் வரலாற்றினை இனக்கலவரங்கட்கு முன் மற்றும் பின் என பகுக்க முடியும். அதிலும் 1990 இற்கு முன் மற்றும் பின் என திட்டமாக கூறவியலும். ஏனெனில் தொண்ணூறாம் ஆண்டு கலவரங்கள் இந்த மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டினையும் பல்வேறு வகைகளில் திசை திருப்பியிருந்தது.

இங்கு காட்டப்பட்டிருக்கும் ஆலங்கேணி கிராமத்தின் வாழ்வியல் நடைமுறைகளும் பண்பாட்டு கூறுகளும் நமது எல்லா கிராமங்களிலும் காணப்படும் பொதுவான அம்சங்களை உடையவைதான்.ஆனாலும் அந்த பொதுமைப்பாடுகளிலும் சில சிறப்பியல்பான நிலவியல் மற்றும் பண்பாட்டு கூறுகளை ஒவ்வொரு கிராமமும் கொண்டிருப்பதுண்டு. அந்த வகையில் தை மாதத்தில் பட்டிப் பொங்கலுக்கு அடுத்த தினத்தில் கொண்டாடப்பட்ட குப்பிப் பொங்கல் இந்த பிரதேசத்தின் சிறப்பியல்பான ஒரு பண்பாட்டு அம்சமாக அடையாளம் காணமுடியும். மார்கழி மாதம் முழுவதும் பிள்ளையாரை மஞ்சளால் பிடித்து வழிபட்ட பின்பு இந்த குறித்த நாள் மாலையில் பொங்கி படையலிட்ட பின்பு ஒரு சிறிய தேர் செய்து அதில் பிள்ளையாரையும் தீபத்தினையும் ஏற்றி ஆற்றில் விடுதலாக இந்த கொண்டாட்டம் அமைகிறது.

இந்த கிராமம் நீரியல் அடிப்படையிலான புவியியல் அமைவினைக்கொண்டது.இரு ஆறுகள் இந்த கிராமத்தினை சூழ ஓடுகின்றன. அவையாவன கட்டையாறு மற்றும் பாசியாறு என்பனவாகும். இந்த ஆறுகள் இம்மக்கள் வாழ்வோடு பின்னிப்பிணைந்தனவாகவும் அவர்கள் வாழ்வுக்கு வசந்தம் தருபவையாகவும் அமைந்துள்ளன. இன்னோர் வகையில் கூறினால் இந்த ஆறுகளின்றி இவ்வூரின் வரலாறு அமையாது.

ஆலங்கேணி பிரதேசத்தில் அதிகமான கால்நடைகள் காணப்படுவதனால் கால்நடை சார்ந்த தொழிலும் இங்கு சிறப்புற்று காணப்படுகிறது. பட்டிகளில் பாலைக் கறந்து காவு தடிகளினூடே காவி வருதல் அழகிய ரீதியாக இந்த நூலிலே விபரிக்கப்பட்டுள்ளது.ஆலங்கேணி தயிரென்பது திருமலை மாவட்டத்தில் பிரபல்யம் மிக்கதொன்று. தயிர் உற்பத்தி இந்த கிராமத்தின் மதிப்பு மிகுந்த கைத்தொழிலாக இருக்கிறது.தயிர் உற்பத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்த நூலிலே காணப்படுகின்றது.

கிண்ணியா துறையடி எனப்படும் நீரோட்டு முனையிலிருந்து வெருகல் வரைக்கும் தமிழ் மக்களே செறிந்து வாழ்ந்திருந்ததாக குறிப்பிடும் இந்த நூலில் ஆலங்கேணி மற்றும் அதனை சூழவிருந்த பல்வேறு கிராமங்களின் பெயர்கள் விபரிக்கப்படுகின்றன.ஈச்சந்தீவு, சுங்கான் குழி, தாமரை வில் என்பன அவற்றுள் சிலவாகும். மாகாமம் என்றோர் கிராமத்தில் மூர்க்கமாதா ஆலயம் இருப்பதாகவும் அங்கு வருடாந்த வேள்வி நடப்பதாகவும் கூறப்படுகிறது. அம்மனை மாதாவாக விபரிக்கும் சொல்லியலை நான் கேள்வியுறுவது இந்த பகுதியில்தான்.

காற்றின் தின்னற் செயலினாலும் நீரோட்டங்களினாலும் உருவான பல்வேறு தீவுகள் ஆலங்கேணியினை சூழ்ந்து காணப்படுகின்றன.சமாவைத்த தீவு, சுள்ளி முறிச்சாள் தீவு, பொன்னாவரந்தீவு, நெடுந்தீவு, கோவிந்தன் தீவு என்பன அவற்றுள் சிலவாகும். இந்த ஒவ்வொரு தீவுக்கும் ஒவ்வொரு சிறப்புகள் உண்டு. அவை தனி அத்தியாயமாக இந்த நூலில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

உழைக்கும் மக்களை பெரும்பாலும் கொண்ட இந்த ஊரில் மாலை வேளைகள் சிறப்பாக கொண்டாடப்பட்டிருந்தன.உழைத்து களைத்த மக்களை உவகையூட்டும் வண்ணமாக பாட்டு கச்சேரிகளும் நாடக அரங்கேற்றங்களும் இங்கே இடம்பெற்றிருந்ததை சிறப்பாக விபரித்துள்ளார் ஆசிரியர். இது இந்த கிராமத்தின் கலையாடல் அல்லது கலையாற்றுகை எனலாம்.

பிற்காலங்களில் இந்த ஊருக்கென கிராம அபிவிருத்தி சங்கம் அமைக்கப்பட்டு அதனூடே இந்த கிராமம் விருத்தி செய்யப்படுகிறது.பாடசாலை, கோவில், தபாலகம் போன்ற நிர்வாக கட்டமைப்புக்களின் வளர்ச்சி மற்றும் விருத்தியில் தானும் ஒருவராக இருந்து கிராமத்தை முன்னேற்றிய கதையினை கூறிச்செல்கிறார் ஆசிரியர்.

கேணிப்பித்தன் அவர்கள் கூறும் தன் வரலாறு அல்லது சுயசரிதை.

தனது வாழ்க்கை வரலாற்றை கூற முனையும் கேணிப்பித்தன் அவர்கள் அதிலும் ஒரு அவையடக்கத்தினை கையாண்டிருப்பதை காணலாம். தனது அம்மாவுடன் மிக நெருக்கமாக இருந்து ஒரு பெண்பிள்ளை போல சாணி தேய்த்து மெழுகிய சுவாரிசியமான சம்பவங்கள் இந்த நூலில் விபரிக்கப்படுகின்றன.தனது ஆரம்ப கால வாழ்க்கை மற்றும் மனைவி மற்றும் பிள்ளைகளுடனான வாழ்வு குறித்து சில பக்கங்களே வந்து போகின்றன.

ஆனால் ஒரு ஆசிரியனாக தானாற்றிய பணிகள் குறித்து மிக விரிவாகவே விபரித்துள்ளார். ஒரு நல்லாசிரியன் என்பவன் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு நூலின் 185 ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

நானும் திரு.தங்கராசாவும் பாடசாலையிலேயே படுத்துறங்குவோம். நாங்கள்தான் பாடசாலையின் காவலாளிகள், தொழிலாளர்கள்.நாங்கள் யாவுமாகி நின்றோம்

இவ்வாறு செய்யும் தொழிலை தன் வாழ்வுக்கு மேலாக நேசித்த ஆசிரியர் சமூகமும் ஒன்றிருந்தது என்பது இக்காலத்தில் வெறும் தகவலாக மட்டும் மிஞ்சி நிற்கிறது என்பது நமது சமூகம் எதிர்கொள்கிற துர்ப்பாக்கிய யதார்த்தம்.

இக்காலத்தில் சாதரணதரம் என அழைக்கப்படும் எஸ்.எல்.சி தராதரத்தை கொண்ட கேணிப்பித்தன் அவர்கள் எவ்வாறு தன்னையும் உயர்த்தி தனது சமூகத்தையும் உயர்த்தினார் என்பது இந்த நூலில் எனது வாழ்க்கை நாடகமாக விரிந்து செல்கிறது.

குறிப்பாக நான்கு துறைகள் தாண்டி தானே தோணி வலித்து சேனையூர் மகா வித்தியாலயத்தில் கடமை செய்தது மற்றும் சுங்கான்குழியில் பாடசாலையை திறந்து நடந்தே பயணித்தது யாவுமே சிலாகித்து பேச வேண்டிய வாழ்வியல் தடங்கள்.

பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற உயரிய கனவுடன் கண்டிக்கு சென்று மலையக பகுதிகளில் இருந்த பின்தங்கிய பாடசாலைகளை பௌதிக வளம் மிகுந்த பாடசாலைகளாக்கியது,வவுனியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பாடசாலைகளை திறந்தமை உள்ளிட்ட பல்வேறு கைங்கரியங்களை தனது பணிக் காலத்தில்செய்துள்ளமையினை இந்தநூல்விபரிக்கின்றது.

ஆலங்கேணி மகாவித்தியாலயத்தில் ஒரு ஆசிரியராக சேர்ந்து அதிபராகி உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்து தானே அனைத்து பாடங்களையும் கற்பித்து மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய கதைகளையும் இந்த நூலில் காணமுடிகிறது.

தனது ஓய்வின் பின்னரும் பல்வேறு நிறுவனங்களிலும் கடமையாற்றிய கேணிப்பித்தன் அவர்கள் நூற்றியாறு நூல்களை வெளியிட்ட பெருமைக்குரியவர். ஆனால் அதை சாதாரணமாக கூறியபடி அப்பால் நகர்ந்து விடுகிறார்.அதுதான் அவர் ஸ்டைல்.எதையும் எளிதாக புன்னகைத்து கடக்கும் மிக எளிய மனிதர்.

நிறைவாக.....

மிக இலகுவான மொழி நடையுடன் சுவாரிசியமாக நகரும் இந்த நூலில் இரண்டு குறைபாடுகள்.

1.நூலின் முற்பகுதியில் சில சம்பவங்கள் மீண்டும் மீண்டும் விபரிக்கப்படுகின்றமை.இது எடிட்டிங் இல் விடப்பட்ட தவறுகளாக இருக்க கூடும்.

2.நிகழ்வுகள் கால ஒழுங்கில் ஆண்டுகளை குறிப்பிட்டு விளக்கியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

நமது வரலாறுகள் சிதறிக்கப்படுகின்ற சூழலில் பெறுமதி மிகுந்த இந்த நூல் காலத்தினால் வேண்டப்படும் உயர் கைங்கரியம் என்றால் மிகையல்ல. இது போன்ற பழைய வரலாறுகள் ஒவ்வொரு கிராமத்தை பற்றியும் எழுதப்பட்டால் பின்னர் அது மாவட்டம் மற்றும் மாகாணத்தின் வரலாறாக மாறும்.

இந்த நூலினை அழகுறும் கலைப்படைப்பாக வெளியிட்டிருக்கும் மகுடம் பதிப்பகமும் பெருமைக்குரியது.

வரலாற்றை திருடுவோருக்கு நீதி தரும் செங்கோல்கள் இந்த அரிய நூல்கள் என்றால் அது மிகையல்ல.

**திருஞானசம்பந்தன் லலிதகோபன்**

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# அன்று இன விடுதலைக்கு: இன்றோ...? போதைப்பொருள் விடுதலைக்கு!



- ந.லோகதயாளன் -

இன விடுதலை வேண்டி போராடிய இனம் இன்று போதையில் இருந்து மீளப் போராடும் அவலத் திற்கு தள்ளப்பட்டுள்ளமை கவலை அளிப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் 12 ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 27 ஆயிரம் கிலோ கஞ்சா இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டதாயின் பிடிபடாமல் கொண்டு செல்லப்பட்டது எவ்வளவு என்ற ஆச்சரியக் கேள்வி மக்களால் எழுப்பப்படு கின்றது.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ள சூழலில், கடந்த 3 மாதங்களில் யாழில் 10 பேர் உயிரிழந்த நிலை யில், 141 பேர் யாழ். போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்றதான தகவலும் வெளிவந்துள் ளது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் பின்பு விடுதலைச் சிந்தனையே ஏற்படக் கூடாது என்பதற்காகவே அந்த எண்ணத்தை மழுங்கடிக் கும் விதத்தில் இந்தப் போதைப் பொருள்கள் நாட் டிற்குள் உலாவ விடப்பட்டது. இதற்கு எடுத்துக் காட்டாக போர் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் போதைப் பொருள் பாவனை என்ற விடயமே அறியப்படாத ஒன்று எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவிக்கின்றார்.

இதேநேரம் 2011 ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் அரச படைகளால் கைப்பற்றப்ப போதைப் பொருட்களின் அளவே தலை சுற்றும் நிலையில் அகப்படாமல் எடுத்துச் செல்லப்பட்டவை எவ்வளவு என்ற இம ாலய கேள்வியும் எழுகின்றது.

ஏனெனில் கடந்த 12 ஆண்டுகளில் கேரள கஞ்சா மட்டும் 27 ஆயிரத்து 357 கிலோ அரச படைகளிடம் அகப்பட்டுள்ள அதே நேரம் 4 ஆயிரத்து 152 கிலோ ஹரோயினும், ஆயிரத்து 81 கிலோ ஐஸ் போதைப் பொருளும் கடல் வழியாக கடத்தி வரப்பட்ட போது அகப்பட்டுள்ளன என கடற்படையினர் உறுதி செய் கின்றனர்.

இவற்றிற்கு மேலதிகமாக தற்போது இலங்கை யிலும் கஞ்சா பயிரப் படும்சமயம் அவைகைப் பற் றப்பட்ட வகையில் அதில் 11 ஆயிரத்து 26 கிலோ அகப்பட்டமை உறுதி செய்யப்படுகின் றது.

அவ்வாறானால் போரின் பின்பு 2011 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 43 ஆயிரத்து 616 கிலோ போதைப்பொருள் இலங்கையில் பிடிபட் டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு கடத்தி வரப்படும் போதைப் பொருள்களில் மிக அதி கமானவை இந்தியா வில் இருந்து கடத்தி வரப்படுகின்றன. என நம்பப்படுகின்ற நிலை மையில் இந்தியக் கரை யோர காவல் படையின ரில் இருந்து பொலிஸார் வரையில் என்ன செய்கின்ற னர் என்ற கேள்வி இந்தியாவில் ஏன் எழவில்லை என்பது ஆச்சரியமாகவே உள்ளது. அதேநேரம் இலங்கை கடற்படையினரின் மிதமிஞ்சிய போர் அனுபவத்தின் மத்தியிலும் அவர்களையும் தாண்டி எவ்வாறு உள்ளே வைவை எடுத்து வரப்படுகின்றன என்ற கேள்விக்கும் விடை கிடைக்கவில்லை.

இதேநேரம் இந்த கேரளாக் கஞ்சா தற்போது இந்தியாவில் கிலோ ஒன்று 20 ஆயிரம் ரூபா முதல் 25 ஆயிரம் ரூபா வரை மட்டுமே விலையாகுவதாக தெரிவிக்கப்படுவதனால் இது இலங்கை நாணயத் தில் ஒரு லட்சம் ரூபா முதல் ஒரு லட்சத்து 25 ஆயி ரம் ரூபாவினை எட்டுகின்றபோதும் இலங்கையிலே ஒரு கிலோ கஞ்சாவானது தற்போது 3 லட்சம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக் கப்படுகின்றது. இந்தப் பின்புலத்தில் எஞ்சிய பணம் கடத்தல்காரரின் வருமானம் என்கின்றனர்.

இதேநேரம் இலங்கைக்கு எடுத்து வரப்படும் கஞ்சா முழுமையாக இலங்கையரின் பாவனைக்கு அன்றி அவை ஒன்று சேர்க்கப்பட்டு பொதி மூலம் வேறு நாடுகளிற்கும் கடத்தப்படுவதாக தற்போது கண்டறியப்படுவதனால் இவைவெறுமனே இலங்கை – இந்திய கடத்தலைத் தாண்டி சர்வதேச வலை யமைப்பாகவே இருக்கும் என பொலிஸார் கருது கின்றனர்.

இன்று குடாநாட்டில் முதியவர்களிடம் இருந்து இளையோரிடம் தாவிய போதைப் பழக்கம் சிறு வர்களிடமும் சென்று விடுமோ என்ற அச்சம் பெற் றோர் மத்தியில் தொற்றிவிட்டது. இவ்வாறெல்லாம் சகல தரப்பையும் பீதிக்குள்ளாக்கியுள்ள விடயம் தொடர்பில் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய திணைக்களங்கள் இன்னமும் அசமந்தமாகவே இருக்கின்றன என யாழ்ப்பாணம் மாவட்டச் செய லகத்தில் கடந்த வாரம் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட சட்ட வைத்திய அதிகாரி தெரிவித் தமை சிந்திக்கப்பட வேண்டிதாகவே உள்ளது.

இதேநேரம் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றி 273 கடல் மைல் தூரம் உள்ளது அதேநேரம் இந்த 273 கடல் மைல் தூரத்தினைப் பாதுகாக்க அல் லது கண்காணிக்க என்னும் பெயரில் 93 முகாம் கள் அல்லது நிலையங்களில் கடற்படையினர் உள் ளனர். அதாவது 3 கடல்மைல் தூரத்துக்கு ஒரு இடம் உள்ளது. அதனையும் தாண்டி எவ்வாறு இந்த போதைப் பொருள்கள் சர்வ சாதாரணமாக எடுத்து வரப்படுகின்றன என்பதற்கும் இன்றுவரை விடைகாண முடியவில்லை.

**QUANTITIES OF DRUGS APPREHENDED BY SLN FROM 2010 TO 22 SEP 2022**

| YESAR | QUANTITY (KG) | | | |
|---|---|---|---|---|
| | HEROIN | KERALA CANNABIS | ICE | LOCAL CANNABIS |
| 2010 | - | - | - | - |
| 2011 | 7.24 | 116.85 | - | - |
| 2012 | - | 39.68 | - | - |
| 2013 | - | 156.60 | - | 29.52 |
| 2014 | 0.36 | 381.69 | - | 20.68 |
| 2015 | 0.00 | 594.27 | - | 44.35 |
| 2016 | 113.33 | 1669.09 | - | 7235.96 |
| 2017 | 29.95 | 1695.43 | - | 3219.79 |
| 2018 | 232.04 | 2113.74 | 0.11 | - |
| 2019 | 762.25 | 3653.43 | 3.01 | 21.27 |
| 2020 | 821.45 | 4976.40 | 900.50 | 361.80 |
| 2021 | 1268.85 | 7095.05 | 158.97 | 69.03 |
| 2022 | 917.44 | 4865.49 | 18.76 | 24.51 |
| TOTAL | 4152.91 | 27357.70 | 1081.35 | 11026.91 |


# தமிழ் கூறும் நல்லுலகு என்றுமே மறக்க முடியாத ஒரு வழிகாட்டி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்

## இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு அவர் பணியை உணர்த்துவோம் – 03

- கலாநிதி ஜீபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**தனிநாயகம் அடிகளார் ஆற்றிய ஆங்கிலப் பத்திரிகைப்பணி**

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச்செய்யவேண்டும் என்பதே தனிநாயகம் அடிகளாரின் நோக்கமாக இருந்தமையால் அவர் தமிழ் இதழ்களை விட ஆங்கில இதழ்களில் அதிக கவனம் செலுத்தினார் என்பதைக் காணக்கூடிய தாகவுள்ளது.



தனிநாயகம் அடிகளார் ஏறக்குறைய 15 தமிழ் இதழ்களில் பத்திரிகைப்பணி ஆற்றியுள்ளவேளை 25 ஆங்கில இதழ்களில் பத்திரிகைப்பணி ஆற்றியுள்ளார் என்று இக்கட்டுரையில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட குறிப்பை இங்கு நினைவூட்டுவது பொருத்தமாகும்.

பொட்டில் சன் சையின் - Bottled Sun shine - The Messenger of the Sacred Heart for Ceylon - The Anthonian - தமிழ் கல்சர் - Tamil Culture - ஜேணல் ஒவ் தமிழ் ஸ்ரடீஸ் - Journal of Tamil studies முதலியவை தனிநாயகம் அடிகள் பத்திரிகைப்பணி புரிந்த ஆங்கில இதழ்களா



கும். இவற்றை இங்கு நோக்குவோம்.

புனித பத்திரிசியார் கல்லூரியில் 1923 – 1930 ஆண்டுகாலப் பகுதியில் கல்வி கற்றபோது பொட்டில் சன் சையின் என்ற ஆங்கில இதழின் ஆசிரியராக பணியாற்றி இவ்விதழில் 17 கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். 1928ஆம் ஆண்டு My Favourite hero in history Nepoleon என்னும் தம் முதல் ஆக்கத்தை பொட்டில் சன் சையின் என்ற இதழில் இவர் எழுதியுள்ளார். The Parting of the Ways என்பது இச்சஞ்சிகையில் இவர் எழுதிய இறுதி ஆக்கமாகும். இவர் கல்லூரியை விட்டு விலகிய பின்னர் இவரின் முக்கிய ஆக்கம் ஒன்று பொட்டில் சன் சையின் என்ற இதழில் 1945 ஆம் ஆண்டு வெளியாகியுள்ளது.

புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின் குருத்துவ வெள்ளி விழாவின் போது தனிநாயகம் அடிகளார் ஆற்றிய மறையுரை The Power and the Glory Sermon preached on the Occasion of the Silver Jubilee of the Late Rev.Fr.T.M.F.Long என்னும் தலைப்பில் வெளியாகியுள்ளது.

தனிநாயகம் அடிகள் 1931 - 1934 ஆண்டுகாலப் பகுதியில் பொரளை புனித பேர்ணாட் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கற்ற காலத்தில் கொழும்பில் வெளிவந்த The Messenger of the Sacred Heart for Ceylon – என்ற இதழில் மேக்ஸ் பெம்பட்டன் என்ற புனைபெயரில் எழுதியுள்ளார். 1933 – 1935 காலப்பகுதியில் தனிநாயகம் அடிகளார் பல கட்டுரைகளை இவ் விதழில் எழுதியுள்ளார்.

தூத்துக்குடி மறைமாவட்டத்தில் வடக்கன் குளம் புனித திரேசாள் பள்ளியில் ஆசிரியப்பணி புரிந்த 1940 - 1945 ஆண்டுகாலப்பகுதியில் இலங்கை சென்று பத்திரிசியார் கல்லூரி அதிபர் லோங் அடிகளாரின் நினைவு நாளில் ஆற்றிய சொற்பொழிவு 1945 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

**ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மலரில்**

The Anthonian என்ற ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மலரில்



1942 – 1943 ஆண்டு காலப்பகுதியில் தனிநாயகம் அடிகளின் ஆக்கம் ஒன்று வெளிவந்துள்ளது. 1920 – 1922 காலப் பகுதியில் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மூன்றாம் வகுப்புவரை படித்து தமிழ் அறிவின் அடிப்படைகளையும் தமிழ் ஆய்வின் முதற்படிகளையும் கற்ற நினைவுகளை நினைந்து ஊர்காவற்துறைக் கவிதை - Poetry of Kayts என்ற கவிதையை எழுதியுள்ளார்.

**1952 - 1966 பகுதியில் தூத்துக்குடியில்**

தனிநாயகம் அடிகளார் 1952 - 1966 ஆண்டு காலப்பகுதியில் தூத்துக்குடியில் இருந்த போது ஆங்கிலக் காலாண்டு இதழான தமிழ் கல்சர் என்ற இதழை முதன்மை ஆசிரியராக இருந்து நடத்தி



யுள்ளார். 1966இல் இவ்விதழின் முதன்மை ஆசிரியராக தனிநாயகம் அடிகளார் இருக்க இலோயலாக் கல்லூரியைச் சேர்ந்த இன்னாசி இருதய அடிகளார் மேலாண்மை ஆசிரியராக இருந்து பணியாற்றியுள்ளார்.

1966ஆம் ஆண்டின் பின்னர் தமிழ் கல்சர் இதழ் வெளிவரவில்லை. தனிநாயகம் அடிகளார் 1952இல் கொழும்பில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தையும் - 1954இல் சென்னையில் தமிழ்க்கலை மன்றத்தையும் - 1961இல் சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தையும் நிறுவி இவற்றின் வெளியீடாக தமிழ் கல்சர் என்ற இதழை வெளியிடச் செய்தார் என்று பேராசிரியர் வ.அ.சுப்பிரமணியம் அடிகளார் எழுதிய தனிநாயக அடிகள் என்ற நூலில் தெரிவிக்கிறார்.




**தமிழ் இலக்கிய கழக இதழாக 1952 முதல் வெளிவந்த தமிழ் கல்சர்**

தனிநாயகம் அடிகளாரின் பொறுப்பில் தமிழ் இலக்கிய கழக இதழாக 1952 முதல் வெளிவந்த தமிழ் கல்சர் என்ற இதழ் 1955 முதல் தமிழ்க்கலைமன்ற இதழாக வெளிவந்துள்ளது. 1960 - 1962 - 1965 - ஆம் ஆண்டுகளில் தமிழ் கல்சர் இதழ் வெளிவரவில்லை. தமிழ் கல்சர் இதழ் வெளியான 12 ஆண்டுகளில் வெளிவந்த 44 இதழ்களில் 276 கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவற்றில் 09 மட்டுமே தமிழ் கட்டுரைகளாகும். இவை வரலாறு - கலை - பண்பாடு - சமயம் - மொழியியல் - இலக்கியம் எனப் பல தலைப்புக்களில் வெளிவந்துள்ளன. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் கட்டுரை ஒன்று அவரின் இறப்பின் பின்னர் வெளிவந்துள்ளது.

ஜேணல் ஒவ் தமிழ் ஸ்ரடீஸ் - Journal of Tamil studies என்ற அரையாண்டு ஆங்கில இதழ் உலகத் தமிழ் ஆராய்ச்சி கழகத்தின் ஏடாக - தமிழியல் பற்றிய ஆய்வு இதழாக - 1969ஆம் ஆண்டு முதல் தனிநாயகம் அடிகளாரால் வெளியிடப்பட்டுள்ளது. 1960 - 1970 ஆண்டுகாலப்பகுதியில் நான்கு இதழ்கள் வெளிவந்த பின்னர் இவ்விதழ் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன ஏடாக வெளிவந்துள்ளது. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் 1964இல் தொடங்கப்பட்டபோது தமிழ் கல்சர் என்ற காலாண்டு இதழ் வழியாகவும் செய்தி மடல் வழியாகவும் எழுதவேண்டுமென தனிநாயகம் அடிகளாரும் மற்றைய அறிஞரும் முடிவு செய்தனர்.

**1966இல் தமிழ் கல்சர் காலாண்டு இதழ் நின்றுபோனது**

ஆனால் 1966இல் தமிழ் கல்சர் என்ற காலாண்டு இதழ் நின்றுபோனமையால் 1968இல் சென்னையில் இரண்டாம் உலகத்தமிழ் மகாநாட்டின் போது உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் ஆங்கில அரையாண்டு இதழ் ஒன்றைத் தனிநாயகம் அடிகளாரை ஆசிரியராகக் கொண்டு தொடங்குவதென்று முடிவு செய்யப்பட்டது. இதன்படியே ஜேணல் ஒவ் தமிழ் ஸ்ரடீஸ் என்ற இதழ் வெளிவரத் தொடங்கியது. இவ்விதழில் தனிநாயகம் அடிகளார் எழுதிய இறுதிக்கட்டுரை தொல்காப்பியம் பற்றி - Tolkappiam The Earliest Record என்ற கட்டுரையாகும்.



32 ஆம் பேரவைத்தமிழ்விழா
சிகாகோ தமிழ்ச்சங்கப் பொன்விழா

**மூன்றாவது வகைப் பத்திரிகைப்பணி**

தனிநாயகம் அடிகளார் தமக்குத் தெரிந்தவர்களையும் நண்பர்களையும் - அவர்கள் உள்நாட்டவர் என்றாலும் வெளிநாட்டவர் என்றாலும் - தம்முடைய சஞ்சிகைகள் பத்திரிகைகளிலும் எழுதி பத்திரிகைப்பணி ஆற்றும்படி ஊக்குவித்த பணி மூன்றாவது வகைப் பத்திரிகைப் பணி எனத்தெரிவித்தோம். அதனை இங்கு நோக்குவோம்.

தனிநாயகம் அடிகளாரின் உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்களை கொண்டு பல ஆக்கங்கள் எழுதுவித்துள்ளார்

தனிநாயகம் அடிகளாரின் தமிழ் கல்சர் - ஜேணல் ஒவ் தமிழ் ஸ்ரடீஸ் முதலிய ஆங்கில இதழ்களில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்களை கொண்டு பல ஆக்கங்கள் எழுதுவித்துள்ளார். உள்நாட்






டுக்குள் தமிழ்நாட்டு அறிஞர்களையும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மற்றைய மாநிலங்களைச் சேர்ந்த இந்திய அறிஞர்களையும் வெளிநாட்டுக்குள் இலங்கை, மலேசியா மற்றும் வெளிநாட்டு அறிஞர்களையும் தம்முடைய சஞ்சிகைகள் பத்திரிகைகளிலும் எழுதுவித்து பத்திரிகைப்பணி ஆற்றியுள்ளார்.

ஆங்கிலத்தில் கட்டுரைகளை எழுதி தங்கள் தமிழியல் கருத்துக்களையும் மற்றும் ஆய்வுகளையும் ஆய்வு முடிவுகளையும் உலகிற்கு உணர்த்த தமிழ்நாட்டு அறிஞர்கள் பலரைத் தமிழ் கல்சர் இதழிலும் பின்னர் ஜேணல் ஒவ் தமிழ் ஸ்ரடீஸ் இதழிலும் எழுதவைத்த பெருமை தனிநாயகம் அடிகளாரையே சாரும் என டாக்டர் பா.இறையரசன் தெரிவிக்கிறார்.

(தொடரும்....)

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## நாச்சியப்பனின் முயற்சி



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 131

முள்ளிவாய்க்காலின் காலத்தில் காங்கிரஸ் அரசாங்கம் இருந்தது. சோனியா காந்தியின் பின்னணி அதிகாரத்தில் மன்மோகன் சிங் பதவியில் பிரதமராக இருந்தார். முள்ளிவாய்க்கால் பின்னடைவின் பின்னர் அவரின் அரசிடம் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை



இ.எம்.சுதர்சன நாச்சியப்பன்

முழுமையாக நடைமுறைப்படுத்தித் தர வேண்டும் எனக் கோரி சில தமிழ்ப் பிரமுகர்கள் இந்திய அரசுக்கு அழுத்தங்கள் தர முயற்சிகள் எடுத்தார்கள். இந்தத் தமிழ்ப் பிரமுகர்கள் ஒப்பந்த காலத்தில் இந்தியாவிற்கு ஆதரவாகப் போராடியவர்கள். இந்தியப்படைகள் வெளியேறும் போது அவர்களை இந்தியா தங்களுடைய கப்பல்களிலே ஏற்றி வந்து பாதுகாப்பும் தந்தது. அவர்கள் சில சர்வதேச நாடுகளின் அரசியல் தலைவர்களுடன் அந்த முயற்சிகளை எடுத்தார்கள். இதன் முனெடுப்புக்கு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ன நாச்சியப்பன் தேவையான உதவிகளை வழங்கித் தனது அரசாங்கத்துடனான தொடர்புகளை மேற்கொண்டிருந்தமையால், அது பொதுவாகவே 'நாச்சியப்பனது முயற்சி' என அறியப்பட்டது. நாட்டில் இருந்து அரசியல் தலைவர்களான ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார், கஜேந்திரன், சுமந்திரன், சித்தார்த்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன் போன்ற பலர் அதில் கலந்து கொண்டாலும், கடைசியில் மாவை சேனாதிராஜா கூறியபடி நூறு வீத ஒற்றுமையான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அதன் அடிப்படையில் இந்தியாவை அழுத்தம் தர வேண்டும் என கேட்கப்பட்டதால் தமிழர் தரப்புகளால் அது முடியாமல் போனது.

போர் முடிந்த காலகட்டத்தில் இந்தியா ஒப்பந்தத்தில் தந்ததை விட மஹிந்த ஒரு தீர்வுத் திட்டத்தை தருவதற்கு தங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார், அப்படியானால் இந்தியாவிடம் அது ஏற்படுத்திக் கொள்ள முடிந்த 13 ஆம் திட்டத்தை ஏன் கேட்க வேண்டும் என்பது மாவையின் தமிழரசு பகுதியினரின் நிலைப்பாடு.

கஜேந்திரர்களோ 'இரு தேசம்' என்ற அடிப்படையில் ஏற்றுக்கொண்டுதான் தீர்வு பற்றிப் பேச வேண்டும், அதனை இந்தியா முதலில் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும், அப்படி இல்லாவிட்டால் சர்வதேசத்தினால் இதனை நிலைநாட்டிக் கொள்ளலாம் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது.

இரண்டாவது முறையும் இந்த முயற்சிகள் அதே பகுதிகளால் எடுக்கப்பட்ட போது அதே நிலைதான். ஆனால் கூட்டமைப்பு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பிறகு பார்க்கலாம், இப்போதைக்கு மாகாண சபைத் தேர்தல்களை அவை இரண்டாக இருந்தாலும் நடத்தித் தரக் கோரியமையால் அழுத்தங்கள் அதனை நடத்தும்படி தரப்பட்டது. அவை நடந்து அவற்றில் வெற்றியீட்டி மாகாண சபை அமைக்கப்பட்டாலும், அதிகாரக் குடுமி மஹிந்தவின் கையிலேயே இருந்தது. எது வித அதிகாரங்களும் தரப்படவும் இல்லை, பகிரப்படவும் இல்லை.

இவ்வளவு காலங்களுக்குப் பிறகு சர்வதேசத்தின் தீர்மான அடிப்படையில்



இரு நாடுகள் அல்லது தேசங்கள் பிறக்கும் என்று மார்தட்டிய தரப்புகள் 2022 ஆம் ஆண்டு சர்வதேச மனித உரிமை பேரவையின் பூஜ்ஜியப் பிரேரணையைப் பார்க்கும் போது பல்லில்லாப் பாம்பை பிடித்தவர்களாக இந்தப் பாம்பு நாகம் போல் சீறும் என தமிழ் மக்களுக்கு எப்படி சொல்வது எனத் தெரியாமல் முழிக்கின்றார்கள். இந்தக் கருத்தை வலுவாக அழுத்திச் சொல்வதனால் சர்வதேசத்தின் ஊடான முயற்சிகளில் மனம் விட்டு, அவற்றைக் கைவிட்டு, வேறு வழிகளும் இல்லை என மனம் சோர்ந்து விட வேண்டும் என்று அர்த்தத்தில் இதனைக் கூற வில்லை. கால நேரங்களில் வருகின்ற சந்தர்ப்பங்களை காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள நினைத்தாலும், தாங்கள்



நினைத்தபடி கிடைத்தால்தான் ஏற்றுக் கொள்வோம் என்ற திமிரிலோ அல்லது மமதைகளிலோ எட்டி உதைத்து, தங்களுக்கு ஏற்ற வழியில் அரசியல் லாபங்கள் தேட தமிழ் மக்கள் வழிதேடிக் கொடுத்து விட்டு, தங்கள் தலைகளிலேயே மண்ணைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வலியுறுத்தத்தான் அந்த விதத்தில் பதிவிடப்பட்டது.

இந்த ஆண்டின் 2022 மனித உரிமை மன்றின் பேச்சிலும் இந்தியா 13 ஆம் திருத்தச் சட்டத்தை அப்படியே அமுல்படுத்துவதில்தான் ஸ்ரீலங்காவின் மீட்சிதங்கிஉள்ளதுஎனஅழுத்தங்களைத் தந்துள்ளது. இடையிலான ராஜதந்திர ஊடாட்டங்களில் 13 என்றால் 13தான் என வலியுறுத்துகிறது. அதற்கு மேலே போய் இரு தரப்பக்களும் இணக்கமான நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்வார்கள் எனின், அதற்கான ஆதரவைத் தரும் என்றும் இந்தியா அறிவிக்கிறது.

ஆகவே, எந்த அத்திவாரங்களில் இருந்து அரசியல் செய்திருந்தாலும், தமிழ் மக்கள் இந்த உண்மையை – யதார்த்தத்தை – எவ்வளவு கசப்பானாலும் ஏற்றுக்கொண்டுதான் ஒத்த நிலைப்பாட்டில் உரிமைக் கோரிக்கைகளை மேல் எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான பாதையைச் செப்பனிட வேண்டும். இவை நடைபெறும்போது, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியில் இருக்கிறார். அவர் அனுபவம் மிகுந்த அரசியல்வாதி. இனப்பிரச்சினையின் பின்னணிகளையும், அதன் தீர்வுகளுக்கு எதிரான நெளிவுசுழிவான அரசியலையும் நடத்தாதவர் அல்லர்.

### ரணிலின் வகிபாகம்

ரணிலின் அரசியல் பாதை அவரது மாமனார் ஜே.ஆர். போன்று சிங்களப் பேராண்மையை நிலை நிறுத்துவதிலும், அதனைத் தங்களது அரசியலுக்கும் செல்வாக்குக்கும் பாவிப்பதிலுமேயே இருந்தது. ஸ்ரீலங்கா சிங்கள, பௌத்த நாடாக – அது ஒரு நாடாக – அதில் ஒவ்வொரு அங்குல மண்ணும் அவர்களது அதிகாரத்தில் அடங்கியதாக, அந்தச் செல்வாக்கில் அவர்களது அனுசரணையில் சிறுபான்மையினர் சீவித்து, தங்களுடன் சேர்ந்து வாழலாம், முன்னேறலாம் என்ற கொள்கைப்பாட்டில் ஆழமாக ஊறியவர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒவ்வொரு வருடாந்தக் கூட்டத்திலும் தனது அரசியல் வழிகாட்டியாக அவர் வகுத்துக் கொண்ட அவரது உறவினர் 'தேசத்தந்தை' என சிங்களப் பேராண்மை கொண்டாடும் டி.எஸ்.சேனநாயக்காவின் காணி, அதன் குடியேற்றங்கள் பற்றிய கொள்கைகளையும் விளக்கங்களையும் முன்மொழிவது அவரது வழமை.

சிங்கள ஆளும் பக்கங்கள் இடையே இருந்த பதவி, அதிகார பூசல்களில் இனப் பிரச்சினை பூதாகரமாக்கப்பட்டுச் சிக்கலுக்குள்ளாகி, அதில் தங்களுக்குள் ஒவ்வொரு வர்க்கமும் ஆதாரம் தேடியதால், இந்தச் சிங்கள ஆளும் வர்க்கங்களிடையே இருந்த அதிகாரப் போராட்டமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை (ஒப்பந்த வடிவிலேனும்) தருவதற்கு மூல காரணமாய் இருந்தது.

அதிகார வர்க்கத்திலிருந்து அதிகாரத்தைத்தக்கவைத்துக்கொள்வதற்குப் போராடிய எந்தச் சிங்கள தரப்பிடமும் – பின்வன்முறையால் புரட்சியை ஏற்படுத்திய ஜே.வி.பியிடமும் கூட – இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு தெளிவான பார்வையோ, சிந்தனையோ, உருப்படியான திட்டமோ இருக்கவில்லை

ஆனால் அவர்கள் எல்லோருமே எவை இந்த இனப் பிரச்சினையை உருவாக்கின என்பதையும், தமிழ் மக்களின்



தேசியப் பிரச்சினை எவ்வாறு எழுந்தது என்பதையும் அறிந்திருந்தார்கள்.

அதேபோல தமிழ் மக்கள் இதனைத் தீர்த்துக் கொள்ள எப்படியான தீர்வு தங்களுக்கு வேண்டுமென தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்தார்களா என்பதைத் தொடர்ந்து பார்க்கலாம்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# தொல்பொருள் என்னும் பெயரிலே வரலாற்றுப் பெருமைமிகு திருக்கோணேஸ்வரம் சூறையாடப்பட்டு கொண்டிருக்கின்றது!

## நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா காட்டம்



(ந.குகதர்சன்)

தொல்பொருள் என்னும் பெயரிலே தமிழரின் வரலாற்றுப் பெருமை கொண்ட திருக்கோணேஸ்வரம் சூரையாடப்;பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த நாட்டிலே வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட தொல்பொருள் திணைக்களம் திருக்கோணேஸ்வரத்தில் மாத்திரம் தொல்பொருள் என்கின்ற போர்வையில் குடியேற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய விடயம் தொடர்பிலான ஒத்திவைப்புப் பிரேரணை மீததான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொல்பொருள் என்னும் பெயரிலே தமிழரின் வரலாற்றுப் பெருமை கொண்ட திருக்கோணேஸ்வரம் சூரையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கோணேஸ்வரர் ஆலயத்தின் புகழை வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இருந்தே பல புராணங்கள் போற்றியுள்ளன. இதற்குச் சிறந்த உதாரணம் தட்சண கைலாய புராணமாகும். இலங்காபுரியை ஆண்ட இராவணனால் வழிபட்ட இந்த ஆலயத்தின் பெருமையை திருஞானசம்மந்தர் பதிகம் மூலம் பாடியுள்ளார். பல்லவ, சோழர் காலக் கல்வெட்டுக்கள் பலவற்றில் இதன் பெருமை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

1624 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் திருகோணமலையிலே ஆட்சி செய்த காலம் இந்தக் கோயிலை உடைத்து அதன் செல்வங்களை அள்ளிச் சென்றமை மாத்திரமல்லாமல், அந்தக் கோயிலை உடைத்த கற்களைக் கொண்டுதான் சரத் வீரசேகர நாடாளுமன்ற உறுப்பினர் கூறிய பிறட்ரிக் கோட்டை என்பது உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் 1952 இலே மூன்று மத ஸ்தலங்களிலே அதுவும் ஒன்று என்று கூறுகின்றார்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக திருக்கோணேஸ்வரத்தைப் புனித நகராக மாற்ற வேண்டும் என்று இந்துக்கள் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 1965 இல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒரு நல்லிணக்கத்தை இந்த நாட்டு அரசுடன் ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வைக் காண வேண்டும் என ஆட்சி அதிகாரத்தில் பங்குகொண்டிருந்தார்கள். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தார். அவர் திருகோணமலை நகரைப் புனித பூமியாக மாற்ற வேண்டும் என்ற பிரேரணை கொண்டு வந்திருந்தார். டட்லி சேனநாயக்காவும் அதற்கு அனுசரணை கொடுத்திருந்தார். ஆனால் விகாராதிபதிகளின் எதிர்ப்பைத் தாங்க முடியாமல் திருச்செல்வத்துக்கே தெரியாமல் அந்த ஆணைக் குழுவை நிராகரித்தமையால் திருச்செல்வம் அமைச்சரவையை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இருந்தாலும் 2018 ஆம் அண்டு திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலே அரச அதிபர், அங்குள்ள நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னலையிலே முடிவு எட்டப்படடது. அங்கு கடைகள் வைத்திருந்த 45 பேரும் அமைச்சர் சொல்கின்றமை போன்று அந்தக் கோயிலையோ, அப்பிரதேசத்தையோ சுற்றியிருந்தவர்கள் அல்லர். அன்று இரத்தினபுரியிலே இருந்து திருகோணமலைக்கு வந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட புஞ்சிநிலமே, தன்னுடைய பிரதேசத்தில இருந்தும், தம்புள்ளை, குருநாகல், பொலன்நறுவை போன்ற பிரதேசங்களில் இருந்தும் தன்னுடைய தேர்தல் அடாவடி வேலைகளுக்காகக் கொண்டு வரப்பட்டவர்கள் தான் அங்கு குடியேற்றப்பட்டார்கள், அவர்களின் வாழ்வாதாரத்துக்காக அந்தக் கோயில் பிரதேசத்திலே தற்காலிகக் கடைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன என்பதை இந்தச் சபை தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்தக் கோயில் நிர்வாகம் மனச்சாட்சியுடன் நடந்து கொள்கின்றார்கள். என்னவென்றால் 2018 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக அவர்களை அங்கு தங்க வைப்பதற்கு எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை என அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், தொல்பொருள் திணைக்களம் என்பது இந்த நாட்டிலே வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது. ஆனால் திருகோணமலையில், கோணேஸ்வரத்தில் மாத்திரம் தொல்பொருளைப் பாதுகாக்க வேண்டிய திணைக்களம் அவ்விடத்தில் வேற்று மதத்தவர்களை, இனத்தவர்களை அந்தக் கோயிலையே வழிபடாதவர்ககளைக் கொண்டு வந்து தொல்பொருள் திணைக்களம் என்கின்ற போர்வையில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் கோயில் நிர்வாகத்தினரை ஆலோசனை பெறுவதற்காகக் கூப்பிடவில்லை, அறிவுறுத்தல் தருவதற்காகவே அழைத்துள்ளோம், நாங்கள் அவர்களுக்கு நிரந்தரமான கடைகள் அமைத்துக் கொடுக்கப் போகின்றோம் என ஆளுநரும், தொல்பொருள் அதிகாரியும் கூறியுள்ளார்கள். ஆனால் அந்தக் கடைகளின் வடிவங்களைப் பார்க்கும் போது அந்தக் கடைகள் கடைகளாக இல்லை, அவை குடியேற்ற வீடுகளாகவே இருக்கின்றன. எனவே அமைச்சர் அவர்கள் இந்த விடயத்தின் நியாயத் தன்மையைப் புரிந்து கொண்டு நியாயமாக நடந்துகொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்துக்கென ஒரு தொல்பொருள் செயலணியை இதற்கு முன்பிருந்த ஜனாதிபதி கோட்டாபய அமைத்திருந்தார். முன்னாள் இராணுவத் தளபதி கமால் குணரட்ண தலைமையில் முழுக்க முழுக்க சிங்கள அதிகாரிகளையும் பௌத்த பிக்குகளையும் கொண்ட ஒரு செயலணியாக அது அமைக்கப்பட்டது. இன்று திருகோணமலை திருக்கோணேஸ்வரத்திலே சிங்களம் மட்டும் பேசக் கூடிய பல்கலைக்கழக மாணவர்களாலேயே அந்தப் பிரதேசத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி நடக்கின்றது. ஏன் இந்த நாட்டிலே தொல்பொருளுடன் தொடர்புடைய ஏனைய மதத்தவர்கள் இல்லையா? கிழக்கு மாகாணத்துக்கென நூறு வீதம் சிங்களவர்களால் மாத்திரம் உருவாக்கப்பட்ட செயலணியும், தொல்பொருள் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்யும் பல்கலைக்கழக மாணவர்களும் எதனைச் செய்ய முனைகின்றார்கள்?

கிழக்கு மாகாணத்திலே சிங்களப் புராதனச் சின்னங்கள் மாத்திரம் தான் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்த முயற்சிக்கின்றார்களா? ஏனைய மதத்தவர்களும் அந்தச் செயலணிக்குள் உள்ளடக்கட வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அந்தச் செயலணி கலைக்கப்பட வேண்டும். அந்தச் செயலணிக்குள் ஏனைய மதத்தவர்களோ, ஆராய்ச்சி செய்யும் பல்கலைக்கழக மாணவர் குழாமிற்குள் ஏனைய மத மாணவர்களோ உள்வாங்கப்பட்டால் அங்கிருப்பது எந்த மதத்தைச் சார்ந்த, எந்த மதத்தினர் வழிபட்ட புராதனப் பொருள்கள் என்பது வெளிப்பட்டுவிடும் என்ற பயமா?

முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகரவிற்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நாட்டிலே நாங்கள் நல்லிணக்கத்தை விரும்புகின்றோம். நீங்கள் கூறுகின்றமை போன்று நீங்கள் தமிழருக்கு இரத்தம் கொடுத்திருக்கலாம், நீங்கள் குறிப்பிட்ட தமிழர்களுடன் சேர்ந்து வாழ்ந்திருக்கலாம். ஆனால், கடந்த அமைச்சரவையிலே இருந்த இனவாதிகளுள் முக்கியமான இனவாதி நீங்களாகவே இருப்பீர்கள்.

இந்த நாட்டை அழித்த சில இனவாதிகள் இருந்திருக்;கின்றார்கள். குறிப்பாக கே.எம்.பி.ராஜரெட்ண, ஆர்ஜி.சேனநாயக்க, சிறிலால் மத்தியு போன்ற மூன்று மிகவும் துவேசமான இனவாதிகள் இருந்திருக்கின்றார்கள். அந்த மூன்று இனவாதிகளையும் ஒன்று திரட்டி ஒரே ஆளாக நீங்கள் இருக்கின்றீர்கள். ஏனெனில் நீங்கள் தற்போது பேசும் போது சுற்றிவர இருந்தவர்களுக்கு முன்னுரிமை, நாங்கள் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்றும் கூறுகின்றீர்கள். ஆனால், இந்த நாட்டிலே கடந்த காலங்களிலே நடைபெற்றவைகளுக்கு நீங்களும் முக்கிய காரணமாக இருந்திருக்கின்றீர்கள்.

எனவே, தொடர்புடைய அமைச்சரிடம் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், ஏழாம் நூற்றாண்டிலே பாடல் பெற்ற இந்தத் திருக்கோணேஸ்வரம் முந்நூற்று நாற்பது ஏக்கர் பரப்பளவைக் கொண்டதை 1971 ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்தாலும், பதினெட்டு ஏக்கருக்கு உட்பட்ட காணி கோயிலுக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. அந்தக் கோயில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். பாடல் பெற்ற தளம் இராஜகோபுரம் இல்லாமல் இருக்கின்றது. அதற்கான இராஜகோபுரம் அமைக்க வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து இங்கு சுற்றுலாவிற்கு வருபவர்கள் இந்த நாட்டைப் பற்றிப் படித்து விட்டுத்தான் வருகின்றார்கள். இந்த நாட்டிலே சோழர் பல்லவ காலத்து ஆட்சியைப் பற்றி அறிந்து விட்டுத்தான் வருகின்றார்கள். அவர்கள் திருக்கோணேஸ்வரத்துக்குச் செல்லும் போது வழியிலே கடைகளை வைத்து இந்து சமயத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வழிபடுவதற்கும், ஆராய்வதற்கும், சுற்றுலாப் பயணிகள் மேலும், மேலும் வருவதற்கும் ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

# சோளம் மற்றும் கிளைபோசேட் களைக்கொல்லி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கல்!

கொழும்பு, செப். 25

கால்நடை தீவனம் தயாரிப்பதற்காக 25 ஆயிரம் மெற்றிக் தொன் சோளம் அல்லது பொருத்தமான தானியங்களை இறக்குமதி செய்வதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெரும் போகத்துக்கான அனைத்து விவசாய நடவடிக்கைகளுக்காகவும் 06 மாத காலத்துக்கு கிளைபோசேட் களைகொல்லி இறக்குமதிக்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## அதியுயர் பாதுகாப்பு வலயம் பற்றிய ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேணுவதற்காக எந்தவொரு நிலத்தையும், கட்டடத்தையும், கப்பல் அல்லது விமானத்தையும் தடைசெய்யப்பட்ட இடமாக பிரகடனப்படுத்த முடியும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பின் பல பகுதிகளை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்து, ஜனாதிபதியால் நேற்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அது தொடர்பில் சங்கம், இன்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்றத்துக்குச் செல்வதற்கு முடிவு செய்திருக்கின்றது.

## மது போதையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நால்வரும் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர்

நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, ஆலயக் கேணியடியில் மாணவர்கள் போதைப்பொருள் பயன்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்தது.

அங்கு சென்ற பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மாணவர் ஒருவர் மாவா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நிலையில் கைது செய்தனர். ஏனைய மூவரும் மதுபானம் அருந்தியவாறு இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

நால்வரும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு வருகை தந்தனர் எனவும் நண்பரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் மதுபானம் அருந்தினர் எனவும் மாணவர்கள் விசாரணையில் தெரிவித்தனர்.

அவர்கள் க.பொ.த சாதாரணதரத்தை முடித்து தற்போது உயர்தரத்தில் கல்வி பயிலும் 17, 18 வயதுடையவர்கள் என விசாரணையில் கண்டற்றியப்பட்டது.

மாணவர்களின் பெற்றோரை அழைத்து மூத்த பொலிஸ் அத்தியட்சகர், பிள்ளைகள் தொடர்பில் கண்காணிப்பு இல்லையா என எச்சரித்தார்.

பாடசாலையில் பயிலும் மாணவர்களை நீதிமன்றில் முற்படுத்தி தண்டனை பெற்றுக்கொடுப்பதனால் ஏற்படும் பாதக நிலை தொடர்பில் எடுத்துரைத்த மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மாணவர்களை எச்சரித்து பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

## அரச எதிர்ப்புப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்லாயிரம் பேர் திரண்டு முன்னெடுத்த இந்த ஆர்ப்பாட்டத்தின் போது 2 பௌத்த பிக்குகள் மற்றும் 4 பெண்கள் உட்பட 84 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் இருந்து டீன்ஸ் வீதியூடாக மருதானை நோக்கிச் சென்ற ஆர்ப்பாட்ட பேரணியை தடுத்து நிறுத்துவதற்காக சுகாதார அமைச்சுக்கு முன்னால் தடுப்பு வேலிகளுடன் பல நூற்றுக் கணக்கில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைகளை பிரயோகித்துப் பேரணியில் சென்றோரைக் கலைத்தனர்.

## திலீபனின் நினைவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

தியாக தீபம் திலீபன் அண்ணனுடைய முப்பத்தி ஐந்தாவது நினைவேந்தல் நிகழ்வுகள் இம்முறை தமிழர் தாயகத்தில் மக்கள் எழுச்சியாக தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

இறுதி நால் நினைவேந்தல் நிகழ்வுகளை இம்முறை பொது கட்டமைப்பின் ஊடாக நடாத்துவதற்கு அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்தமையை அடுத்து நிகழ்வு ஏற்பாட்டுகள் நடைபெறுகின்றன.

இந்த பொதுக் கட்டமைப்பில் அனைத்து தமிழ்த் தேசியத்திற்கான பொது அமைப்புகள், மதகுருமார் ஒன்றியங்கள், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொதுமக்கள், என பலதரப்பட்டவர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாக பின்னணியிலிருந்து தமிழ்த் தேசியத்திற்கான அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக இந்த இறுதி இரண்டு நாள்களும் அதாவது ஞாயிறும் திங்களும் இந்த நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஞாயிற்றுக்கிழமை தியாக தீபம் திலீபன் அவர்களுடைய நினைவாலயத்திற்கு அருகாமையில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை அடையாள உண்ணாவிரதம் ஒன்றை நடாத்துவதற்கு பொதுக் கட்டமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

அதேபோன்று மறுநாள் (நாளை) திங்கட்கிழமை இறுதி நாள் அன்று தியாக தீபம் திலீபன் அண்ணனுடைய சொந்த இடமான ஊரெழுவில் காலை 8 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து வாகன ஊர்தி பயணம் ஆரம்பமாகி 10 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள அண்ணனின் நினைவாலயத்தை வந்தடையும்.

இந்த ஊர்திப் பயணத்தில் ஏனைய அமைப்புக்களின் ஊர்திகளும் பங்கெடுத்துக் கொள்ளும். ஆகவே இந்த இறுதி நிகழ்விலும் எமது தேசத்து தமிழ் உறவுகள் அனைவரும், குறிப்பாக விடுதலைப் போராளிகள், பல்கலைக்கழக மாணவ சமூகங்கள், பாடசாலை மாணவர்கள், வர்தக சங்கத்தினர், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் என அனைத்து தரப்பினரும் கலந்து கொள்ளச் வேண்டும். - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




காலைக்கதிர்
Kalaikkathir

# வனவளத் திணைக்கள தீர்மானங்களில் மாற்றம்!

அடர்ந்த காடுகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களால் அடையாளப்படுத்தப்பட்ட காணிகளில் விவசாயம் மற்றும் நீர்வேளாண்மை உற்பத்திகளை உடனடியாக ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வார காலத்தில் அவை தொடர்பான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் மேற்படி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்தத் திணைக்களங்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகள் மற்றும் யுத்தத்துக்கு முன்னர் மக்கள் பயன்படுத்திய காணிகள் போன்றவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு உரியவர்களிடம் கையளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் வடக்கு மாகாணத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களுள், விவசாயம் மற்றும் நீர்வேளாண்மை எனப்படும் நீரியல் உயிரின வளர்ப்பு உற்பத்திகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான இடங்களை விடுவித்து, உற்பத்திகளை மேற்கொள்வதற்கு பிரதேச மக்களிடம் கையளிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கான துறைசார் அமைச்சர்கள் உள்ளிட்ட உயர்மட்டக் கலந்துரையாடல், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைய, வனப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சில் இடம்பெற்றன.

இதன்போது, பல்வேறு விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், மேற்குறிப்பிட்ட தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோன்று, மன்னார் சுவாமித் தோட்டம் கிராமத்தில் கடந்த பல நூற்றாண்டுகளாக தேவாலயத்தால் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில், தேசிய பூங்கா அமைக்கும் திட்டத்துக்கு அமைய, அண்மையில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை மீள அளிப்பதற்கும் அந்தத் திணைக்களம் சம்மதித்துள்ளது.

அண்மையில் மன்னாருக்கான விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த சம்பந்தப்பட்ட தேவாலயத் தரப்பினர், மக்கள் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்ட அந்தக் காணிகளை மீட்டுத் தருமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் இடம்பெற்ற இன்றைய சந்திப்பின் போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், சுவாமித் தோட்டக் காணிகளை



மீள் அளிப்பதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், துறைசார் அமைச்சுக்களின் அதிகாரிகளும், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானும் கலந்துகொண்டார்.

# நிலக்கரி ஒப்பந்தத்தை இடைநிறுத்த அமைச்சரவை எடுத்தது நடவடிக்கை

## மின்சக்தி அமைச்சர் காஞ்சன தகவல்



மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க, ஓகஸ்ட் 25 ஆம் திகதி வழங்கப்பட்ட நிலக்கரி ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தெரிவு செய்யப்பட்ட வழுங்குநர்கள் உரிய ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாது என அமைச்சுக்கு அறிவித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். சட்டதலையீடு மற்றும் பணம் செலுத்துவதில் உள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக நிறுவனம் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலத்துக்கு நிலக்கரி பெறுவதற்கான புதிய ஒப்பந்த அறிவிப்பை அமைச்சகம் வெளியிடும் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# கொரோனா தொற்று நாட்டில் அதிகரிப்பு!

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 17 பேர் கடந்த வெள்ளிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 லட்சத்து 70 ஆயிரத்து 685 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடதக்கது.

# திரிபோஷாவில் நச்சுத்தன்மை உள்ளதாக கூறியமை உபுல் றோஹணவிடம் 2 ஆவது நாளாக விசாரணை!

திரிபோஷாவில் புற்றுநோயை உண்டாக்கும் அஃப்ளாடோக்சின் கலந்துள்ளதாக கூறப்பட்டமை தொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹணவிடம் வெள்ளிக்கிழமையும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டாவது நாளாக அவர் சுகாதார அமைச்சின் விசேட புலனாய்வுப் பிரிவின் விசேட சோதனைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

வாக்குமூலமளிக்க வந்தபோது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த உபுல் றோஹண, திரிபோஷாவில் புற்றுநோயை உண்டாக்கும் அஃப்ளாடோக்சின் கலந்துள்ளதாக தாம் கூறிய கருத்து சரியானது எனவும் தெரிவித்தார்.

# அஹுங்கல்லவில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பரிதாபசாவு; ஒருவர் காயம்

அஹுங்கல்ல, போகஹபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளிக்கிழமை இரவு போகஹபிட்டிய, உரகஹா வீதியில் ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவரும் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில், அஹுங்கல்ல பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அஹுங்கல்ல பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய மற்றைய நபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட இடத்தில் 5 வெற்றுக் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அடக்குமுறைகளுக்கு எதிரான தொழிற்சங்க போராட்டம் தொடரும்

## ஜீவன் தொண்டமான் உறுதி



தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை வெற்றியளித்துள்ளது. இது ஆரம்பம் மட்டுமே, கம்பனிகளின் அடக்குமுறைகளுக்கு எதிரான எமது தொழிற்சங்கப் போராட்டம் தொடரும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு கட்சி, தொழிற்சங்க பேதமின்றி தொழிலாளர்கள் ஓரணியில் திரண்டு ஒத்துழைப்பு வழங்கினர். இதனால் தோட்டத்திலிருந்து ஒரு கிராம் தேயிலைகூட வெளியில் செல்லவில்லை.

இந்நிலையில் தொழிலாளர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்பதற்கு பெருந்தோட்ட நிறுவனம் இணக்கம் தெரிவித்து, எழுத்துமூல உத்தரவாதத்தை வழங்கியுள்ளது. இதனையடுத்து போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இதனையடுத்து மஸ்கெலியா தோட்டப் பகுதிகளுக்கு களப்பயணம் மேற்கொண்ட ஜீவன் தொண்டமான், தொழிலாளர்களுடன் கலந்துரையாடி, தொழிற்சங்க நடவடிக்கைக்காகக் கிடைத்த வெற்றியைப் பற்றி மக்களுக்குத் தெளிவுப்படுத்தினார். அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் –

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் 10 தொழிற்சாலைகளும், பதுளையில் 3 தொழிற்சாலைகளும் இருந்தன. இவற்றில் இருந்து கொழுந்தை வெளியில் கொண்டு செல்ல நாம் அனுமதிக்கவில்லை.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம், கூட்டு ஒப்பந்தத்தை மதிப்பதில்லை, பேச்சுகளுக்கு வருவதும் இல்லை. தொழிற்சங்க நடவடிக்கையை அடுத்து பேச்சுக்கு வந்தனர்.

எழுத்துமூல உத்தரவாதத்தை வழங்கினர். நிலுவை கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. நிலுவை பணம் கிடைக்கும். அனைத்து தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்கின. நாம் மட்டும் பேர் போட முடியாது. மக்களின் பிரச்சினை தீர்ந்தால் சரி. இனி நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்றார்.

# முதியோர் கொடுப்பனவு பெறுவதில் இழுபறி நிலை!

முதியவர்களுக்கு என வழங்கப்படுகின்ற கொடுப்பனவு 20 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை அருகில் உள்ள தபால் நிலையங்களில் பெற்று வரப்பட்டது.

தற்பொழுது சமுர்த்தி வங்கியின் ஊடாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென தபால் அதிபர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் மக்கள் தமது முதியோர் கொடுப்பனவைப் பெற பல கிலோமீற்றர் தூரங்களில் இருந்தும் சமுர்த்தி வங்கிக்குச் சென்று தமது பணத்தைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது பணத்தைப் பெற வேண்டுமாயின் அதற்கான வங்கிக் கணக்கை புதிதாகத் திறக்க வேண்டும் என சமுர்த்தி வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

அப்படி திறந்தபின்பும், தமக்கு இன்னும் பணம் கிடைக்கப் பெறவில்லை எனவும், கிடைத்தவுடன் கிராம சேவையாளர் ஊடாகத் தெரியப் படுத்திய பின் வந்து கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக தமக்கு வழங்கப்படுகின்ற ஆயிரத்து 900 ரூபா பணத்தைப் பெறுவதற்காக 2 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான பணத்தைச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது வழங்கப்படுகின்ற 1,900 ரூபா பணத்தை நம்பியே சில முதியவர்கள் தமது அத்தியாவசிய செலவை மேற்கொண்டு வந்தனர். அந்தப் பணம் இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும், தபால் நிலையங்கள் ஊடாகவே தமது பணத்தைப் பெறுவது இலகுவாக அமைந்துள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த உதவிப் பணத்தை தபால் நிலையங்களில் ஊடாகவே பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒழுங்கமைத்து தரும்படி முதியவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2022இல் வெளியிடப்பெற்றது.